
www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE




TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 32

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழிக்கப்படும் கிழக்கு மாகாணம்.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதில் அடங்கும் கிழக்கு மாகாணம் ஆரம்பத்திலிருந்தே அரசியலில் முக்கிய இலக்காக இருந்துவருகிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பைத் தடுப்பதற்காக இலங்கையின் ஆளும் வர்க்கம் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களைக் காலத்துக்காலம் திட்டமிட்டு நடத்திவருவதும், கலவரங்களின்-போதும், இராணுவத் தாக்குதல்களின்போதும் இயலுமானவரை தமிழ், முஸ்லீம் மக்களைக் கொன்றும், அகதிகளாக அப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றியும், கிழக்கு மாகாண தமிழ், முஸ்லீம் மக்களின் பொருளாதாரத்தை நிர்மூலமாக்குவதும் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அம்சங்களாகும்.

இவற்றின் அடுத்த பரிமாணமாக, தற்போது கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லீம் மக்கள் பரஸ்பரம் எதிரிகளாக்கப்பட்டு, அவர்களுக்கிடையே மோதல்கள் தூண்டிவிடப்பட்டு, நாளொன்றுக்கு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இரு தரப்பிலும் கொல்லப்பட்டுவருமளவிற்கு இலங்கை அரசின் ராஜதந்திரம் வெற்றியடைந்துள்ளது.

மசூதிகளில் முஸ்லீம்கள் சுட்டுக்கொல்லப்படுவதும், வயல்களில் தமிழர்கள் வெட்டப்பட்டு, எரிக்கப்படுவதும் நாளாந்தம் நிகழும் நிகழ்வுகளாகிவிட்டன.

ஆயுதம் ஏந்திய முஸ்லீம் காடையர்கள் அப்பாவித் தமிழர்களைக் கொன்றுவருவதாகப் புலிகளும், அப்பாவி முஸ்லீம்களை ஈவிரக்கமின்றி புலிகள் கொலை செய்வதாக முஸ்லீம் காங்கிரஸும், இலங்கை அரசும் மாறி மாறிக் குற்றம் சாட்டிக்கொள்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் இன்றைய நிலைமைகளுக்கான காரணங்களை ஆராய்கையில், இதுவரை தமிழ்-முஸ்லீம் மக்களுக்கிடையேயிருந்த உறவு கேள்விக்குரியதாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லீம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்தமை சிறுபான்மை இனங்களுக்கிடையே இருக்கக்கூடிய பிரச்சினைகளை ஆயுதமுனையில் அணுகியமை, மலையக மக்களை 'வடக்கத்தையார்' என்றதுபோல, முஸ்லீம் மக்களை 'தொப்பி பிரட்டிகள்' என்று இழிவாக நோக்கியமை, சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் முஸ்லீம்களின் பங்கைச் சரியாகக் கணிக்காமை போன்றன தமிழர் தரப்பிலிருந்து அனைத்து இயக்கங்களினாலும் இழைக்கப்பட்ட தவறுகளாகக் கொள்ளலாம்.

இதேபோல், முஸ்லீம்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உருவாகிய முஸ்லீம் காங்கிரஸ் தனது வர்க்கச் சார்பு நிலையால் ஆளும் வர்க்கங்களுடன் தன்னை இணைத்துக் கொண்டதும், ஜிகாத் என்ற ஆயுத அமைப்பை உருவாக்கி புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகைகள் என்ற ரீதியில் தமிழர்களுக்கெதிரான தாக்குதல்களை நடத்தியமை, ஆயுதபாணிகளாகவேண்டும் என்பதற்காக இலங்கைப் படைகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்று, அவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளமை என்பன முஸ்லீம் தரப்பிலிருந்து முஸ்லீம் கட்சிகளினாலும், ஆயுதக் குழுக்களாலும் இழைக்கப்பட்ட தவறுகளாகக் கொள்ளலாம்.

இந்த நிலைமைகளில், தமிழர்-முஸ்லீம்களிடையே விரிசல் ஏற்பட்டு வருவதைச் சரியாகக் கணிப்பிட்ட இலங்கை அரசு, தற்போதைய தனது சிறுபான்மையினருக்கெதிரான இராணுவ அடக்குமுறைகளில் இந் நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கியுள்ளது.

இதன் விளைவு அப்பாவி தமிழ், முஸ்லீம் விவசாயிகள் கண்மூடித்தனமாகக் கொல்லப்படுவதுடன், வடக்கு-கிழக்கு இணைப்பு, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள் என்ற விடயங்கள் கேள்விக்குரியதாகியுள்ளன.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வெகுஜன ஸ்தாபனங்கள், மனித உரிமை நிறுவனங்கள் என்பன அரசினாலும், அனைத்து ஆயுதக்குழுக்களினாலும் செயலற்றதாக்கப்பட்டிருக்கும் இன்றைய நிலையிலும், கிழக்கு மாகாணத்தின் உண்மைநிலைகள் வெளி உலகிற்குக் கொண்டுவரப்படாத நிலையிலும், இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனிதப் படுகொலைகளை நிறுத்தவும், தமிழர்-முஸ்லீம்களுக்கிடையிலான விரிசலை அகற்றி உறவைப் பலப்படுத்தவும், பொது எதிரியான இலங்கை அரசினது இனங்களைப் பிரித்தாளும் சூழ்ச்சிகளை முறியடிக்கவும் வெளிநாடுகளில் இருக்கும் நாம் எந்தவகையில் பங்காற்றலாம் என்பதற்கான வழிவகைகளைத் தேடுவது அவசியமாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விபச்சாரத்தில் சிறுவர்கள்

இன்றைய முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ஆண்கள் தங்கள் கூலி உழைப்பையும் பெண்கள் கூலி உழைப்புடன் தங்கள் உடலையும் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அமைப்புமுறை இத்துடன் நிறுத்திக்கொள்ளாமல், தன் கோரப் பற்களை பச்சிளம் பாலகர்கள் மீதும் பதித்து வருகிறது.

ஆம்! சிறுவர்கள் பலாத்காரமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.

அநேக ஆசிய நாடுகளில் பாலியல் விலைகளை அடிப்படையாகக்கொண்ட உல்லாசப் பயணம் இன்று அந்த நாடுகளின் குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் மூலகாரணியாகவும், அதன் வளர்ச்சிக்கு அடிப்படை-யாகவும் அமைகிறது.

மூன்றும் உலகை நோக்கிய உல்லாசப் பயணத்துறை எவ்வாறு சிறுவர் விபச்சாரத்தை ஊக்குவிக்கிறது என்பதை ஆராயுமுகமாக தாய்லாந்து, இலங்கை பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த சமூகவியலாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இவர்களின் ஆய்வுகள் பல திடுக்கிடும் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன.

தாய்லாந்தில் மட்டும் 16 வயதிற்குட்பட்ட, 10,000 க்கும் மேற்பட்ட சிறுமிகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத் தகவலை பாங்கொக்கிலிருக்கும் சிறுவர் பாதுகாப்பு மையம் உறுதிப்படுத்தியுள்ளது.

உலகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாய்லாந்தின் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் பல கிராமங்களில் சிறுமிகளைக் காண்பதே அரிதாகி வருகிறது. இக்கிராமங்களைச் சேர்ந்த சிறுமிகள் நகர்ப்புறங்கள், உல்லாச-விடுதிகள், விபச்சார நிலையங்கள், மதுபானசாலைகள் போன்றவற்றில் பலாத்காரமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைகள் உயிர் வாழ்வதற்கும், முழுக் குடும்பத்-தையும் காப்பாற்றுவதற்குமாக தங்கள் பெண் குழந்தைகளை ஏஜெண்டுகளுக்கு விற்று விட்டதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தமது பெண் பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது அநேகமான குடும்பங்களுக்கு தெரியவராமல் மறைக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்சில் உல்லாச-மையங்களிலும், இராணுவ முகாம்களிலும் சிறுவர் மீதான பாலியல் வன்முறைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

உல்லாசப் பயணிகளின் வருகை கூடிய **பக்சாஜான்** எனும் நகரில் அவ்விடத்து அரச நிறுவனங்களே விபச்சார விடுதிகளுக்குத் துணை போவதிலும் அவற்றை நடாத்துவதிலும் ஈடுபட்டுள்ளன என்ற உண்மை இப்போது தெரியவந்துள்ளது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல இளைஞர்கள் இரவு தங்குவது என்ற போர்வையில் விபச்சாரத்திற்காக சிறு கிராமங்களை நோக்கிப் படையெடுக்கின்றனர். அங்கு தங்கள் பாலியல் இச்சைகளைத் தீர்த்துக் – கொள்ளும் அந்த இளைஞர்கள் தாங்கள் இரவு தங்கியதற்காக கொடுக்கும் பணமே அக் கிராமங்களின் வருமானமாக உள்ளது. அதனால் பல கிராமங்களின் முழு வருமானமுமே இப்படியான தங்குவிடுதிகளின் வருவாயில்தான் தங்கியுள்ளது.

இலங்கையில் போர்நிலைமைகளினால் கடந்த 6 வருடங்களாக உல்லாசப் பயணம் வீழ்ச்சியடைந்த போதிலும், விபச்சாரத்திற்கான உல்லாசப் பயணம் – பிரத்தியேகமாக தன்னினச் சேர்க்கை – இந் நாட்டில் அதிகரித்துவருகிறது.

சிங்கள ஆய்வுக்குழுவொன்றின் தகவல்களின்படி பாலியல் இச்சைக்குப் பயன்படுத்தப்பட்ட ஏராளமான குழந்தைகள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் அதிக பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதன் பிரதிபலிப்புகள் முழுச் சமூகத்தையும் பாதிப்பது தவிர்க்க முடியாததாகிவருகிறது

பாலியல் வன்முறையாகவும், நவீன ஒடுக்குமுறையாகவும், மிருகத்தனமானதாகவும் விபச்சாரத்தில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டுவரும் கொடுமை வளர்ச்சியடைந்துகொண்டே போகிறது. இதைத் தடுக்க யாராலும் முடியவில்லை.

இதுதான் இன்றைய உலகம்.

ஜ.பி/ந.நி



---

குறிப்பிடத் தவறியவை

அட்டைப்படங்கள் : நன்றி

கேடயம் – கலம் 29

துட் ஆசியன் – கலம் 30

டெயர் ஜபர் பிளிக் – கலம் 31

துட் ஆசியன் – கலம் 32

சரி நிகர் – இந்தக் கலம்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்களும் தான் காரணம்

● தேவன் ●

பெண்ணே நீ
உணர்வுகளை இழந்து
இறந்துபோனது தெரியும்.

கல்யாணச் சுடுகாட்டில்
அக்கினி வளர்க்க
நெய்யாகப்
பணத்தையும் கொடுக்கிறாயே.

தனது
ஆசைகளுக்கு மட்டுமாய்
குளிர் காயும் ஆணை
வெளிச்சமென நம்பி
விட்டில் போல் எரிகிறாயே.

அதைத்தான் தாங்க முடிவதில்லை.

உங்களின்
தற்கொலைகளுக்கு
ஆண்கள் மட்டுமல்ல
சில அம்மாக்களும்
காரணம்தான்
அறிவாயா பெண்ணே.

வேரோடு சாய்கிற
மரத்திற்கு
கோடாரி மட்டுமல்ல,
மரப் பிடி கூடக்
காரணம்தான்.

www.tamilarangam.net

# தேசத்தின் குறிப்புகள்

## பிரஜைகள்

வடக்குக் கிழக்கு யுத்தம் தொடங்கிய இந்த 2 மாதங்களுள் இதுவரை 300க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள் என்று முஸ்லீம் கொங்கிரஸ் அறிவித்துள்ளது

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 250பேர்வரை புலிகளால் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள்

கல்முனைப் பகுதியிலும், கிழக்கு மாகாணத்தில் பரவலாகவும் தமிழ் – முஸ்லீம் கலவரங்கள் நடந்துள்ளன.

தினசரி கொழும்புப் பத்திரிகைகளில் முஸ்லீம்களைப் பள்ளிவாசல்களில் வைத்தும் வெளியேவைத்தும் கிராமங்களைத் – தாக்கியும் புலிகள் கொன்றுவருவதாக அரசு செய்திகளைத் தருகிறது. மாங்குளத்தில் 19பேர் கொல்லப்பட்டுக் கிணற்றில்போடப்பட்டிருப்பதாக அரசு அறிவிக்கிறது.

இந்தச் செய்திகள் மிகவும் கவலைக்கிடமான செய்திகளாக இருந்ததால் நான் எனது 'அரசியல்' நண்பரைத் தேடிப் போனேன்.

வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான இந்த நண்பருடன் நிலைமைகளைப் பற்றி விவாதிப்பதில் எனக்கு ஒரு திருப்தி.

அவரிடம் இந்தச் செய்திகளைப் பற்றிக் கேட்டபோது அவர் ஆங்கிலப் பத்திரிகைக்கட்

www.tamilarangam.net

டுகளை அடுக்கி வைத்துக்கொண்டு போரில் இறந்த, எரிக்கப்பட்டப் பொதுமக்களை எண்ணிக் கொண்டிருந்தார்.

"என்ன செய்கிறாய்?"

"கொழும்புப் பத்திரிகைகளின் நிருபர்கள் தரும் செய்திகளின்படி போரில் எந்த சிவிலியன்களும் இறந்ததாகத் தெரியவில்லை" என்றார் அவர்.

நான் 250 முஸ்லீம்கள் கிழக்கில் கொல்லப்பட்டிருப்ப-தாக முஸ்லீம் காங்கிரஸ் சொன்னதைப் பற்றிக் கேட்டேன்.

"அது போரில் அல்ல, இன ஒழிப்பு நடவடிக்கையாக எல்.ரி.ரி.ஈ. செய்ததாக அல்லவா வந்துள்ளது" என்றார் அவர்.

"எப்படியோ இது தமிழ் முஸ்லீம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தாதா? இது அரசாங்கத்தின் திட்டமிட்ட பிரச்சாரமென்றே நான் நினைக்கின்றேன்" என்றேன் நான்.

அவர் சிரித்தார்.

"நமது பேராசிரியர் ஒருவர் சொன்னார் ஒருமுறை, எல்லாத் தமிழர்களுடைய மனதிலும் ஒரு சின்னப் 'புலி' இருக்கிறது என்று. அது உண்மைபோலத்தான் இருக்கிறது"

"ஏன்?"

"அரசாங்கத்தின் பிரச்சாரம் என்று சொல்கிறாயே. ஏன் எமது 'இயக்கங்கள்' அப்படிச் செய்ய மாட்டாவா?"

"இல்லை.. இந்த நேரத்திலை..." எனக்குச் சரியாக ஒரு பதில் சொல்ல முடியவில்லை. நான் தடுமாறினேன்.

"தம்பி, உனக்கு விசயங்கள் பிடிபடுற அளவுக்கு அதை நம்பமுடியாமல் இருக்கு. அது தான் உன் மனதுக்குள்ளும் ஒரு புலி இருக்குது என்று சொன்னேன்" என்றார் அவர்.

'தம்பி' என்று அவர் அழைப்பது இடைக்கிடை நடப்பதுதான். ஆனால் அதிலும் ஒரு வகை சிலேடை நயம் இருப்பது எனக்கு அப்போது புரியவில்லை

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"அரசாங்கம் தமிழ் மக்களையும், முஸ்லீம் மக்களையும் பிரிக்கப் பார்க்குது என்பது போலத்தான் முன்பு கூட்டணியும் தமிழரசுக் கட்சியும் தமிழரையும், சிங்களவரையும் பிரிக்கப் பார்க்கினம், இனவாதம் பேசுகினம் என்று எங்கடை இடது-சாரிகள் சொன்னவை"

"அது அவையள் பிரச்சினையைச் சரியா எடைபோடாமல்..."

"எடை போடுறதல்ல பிரச்சினை. யார் என்ன சொன்னாலும் அது எடுபடுகிற நிலை ஏற்கெனவே இருந்தாலொழிய அது எடுபடாது என்பதுதான் பிரச்சினை. கட்டாந்தரையிலை விதையைப் போட்டால் முளைக்காது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்கிற மாதிரி ஏதோ ஒரு உதாரணம் பைபிளிலை வரும் தெரியுமே?"

"தெரியும்"

"அது மாதிரித்தான். இந்த மாதிரி இனப்பிளவு வேலைகளுக்கு வசதியான விளைநிலமாக எமது தமிழ்—முஸ்லீம் உறவு இருக்குது. அதாலைதான் எடுபடுகுது அல்லாட்டி அமிர்தலிங்கம் கோஷ்டியின் கோஷ்டி கானம் அன்றைக்கு எடுபட்டிராது. அந்த மாதிரி நிலத்தைத் தயார்ப்படுத்தித் தந்துவிட்டது அரசு. இப்ப முஸ்லீம் தமிழ்ப் பிரச்சினையும் அப்பிடித்தான்.."

"அதுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லையே? தமிழரும், முஸ்லீம்களும் நீண்டகாலமாக ஒற்றுமையாகத்தானே இருந்தவை?"

"இந்த ஒற்றுமைதான் பிரச்சினையே. எந்த அடிப்படையிலை ஒற்றுமை இருந்தது? முஸ்லீம் மக்களின்ரை தனித்துவத்தை எப்பவாவது எங்கடை தமிழ்க் கட்சியள் அங்கீகரிச்சிருக்குதா? சிங்களக் கட்சியள் தமிழ் மக்களின்ரை தனித்துவத்தை அங்கீகரிக்க மறுத்த மாதிரித்தான் தமிழ் கட்சியளும் நடந்திருக்கு"

"ஏன், கூட்டணியிலை இருந்து புலியள்வரை எத்தினை முஸ்லீம்கள் வேலை செய்யினம். செய்திருக்கினம்"

"அப்பிடி விசயத்தைப் பாக்கேலாது. அப்பிடியெண்டால் எத்தினை தமிழர் யூ.என்.பி.யிலை இருந்திருக்கினம். தங்கடை இன அடையாளம் மதிக்கப்படுகிறதா இல்லையா என்பதுதான் இங்கை பிரச்சினை. எங்கடை இயக்கங்கள் எல்லாம் முஸ்லீம்களை ஒரு தனித்துவ இனம் என மதிப்பதில்லை" என்ற அவர் மேலும் தொடர்ந்தார்.

"முஸ்லீம்கள் தமிழ்மொழியைப் பேசினாலும் அவர்களின் — இன அடையாளம் வேறு. எப்படி மலையகத் தமிழர்களும், இலங்கைத் தமிழரும் ஒரு இனம் என்று சொல்ல முடியாதோ அப்படியே முஸ்லீம்களும் தமிழர்களும் கொண்டுள்ள இன அடையாளங்கள் வேறு வேறு. நாம் ஒன்று — ஒன்றாக இருப்போம்— எனக் கருதி அவர்களை நசுக்கும் மனோபாவம்தான் எங்கடை தமிழர் மத்தியிலை இருக்குது. குறிப்பாக அரசியற் கட்சிகளிடமும், இயக்கங்களிடமும்."

"தமிழ் பேசும் இஸ்லாமியர், தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள், தமிழ் பேசும் சைவர்கள் என்று எல்லோரும் தமிழ் பேசுபவர்கள் என இணையலாமே? ஏன் மதரீதியாக இவர்கள் பிளவுபடவேண்டும்?"

"இது வெறும் மதப் பிரச்சினையல்ல. கிறிஸ்தவமும், சைவமும் தமிழர்களின் மதங்கள். ஆனால் முஸ்லீம்களின் மதம் இஸ்லாமியம். முஸ்லீம்கள் முதலாவதாகத் தமிழர்கள் அல்ல — அவர்கள் தமிழ் பேசிய போதும்! ஆனால் அவர்களும் ஒரு சிறுபான்மையின

www.tamilarangam.net

ம் என்றபடியால் எங்கடை போராட்டம் அவர்களுக்கும் தேவையாக இருக்குது. ஆனால் அவர்களை இணைக்க எங்கடை இயக்கங்கள் எந்த அக்கறையும் காட்டுவது கிடையாது"

"எங்கடை இயக்கங்கள் தங்களுக்கிடையிலேயே ஒற்றுமை இல்லாமல் இருக்குது..." என்று சலித்துக்கொண்டேன் நான்.

" அது வேறை. இது வேறை அதுவும் ஒருவகை அங்கீகாரம் பற்றிய பிரச்சினைதான். ஆனால் இது ஒரு இனம் பற்றிய பிரச்சினை. அதைக்கூட ஒருவேளை வேறைகாரணிகள் ஒன்றுபடுத்தலாம் ஆனால் இது திட்டவட்டமாக அங்கீகாரத்துடன் சம்பந்தப்பட்டது தன்னுடுள்ள ஒரு சிறுபான்மையினத்திற்குரிய அடையாளங்களை அங்கீகரிக்கவும், மதிக்கவும் அதன் உரிமைகளைப் பேணவும் தயாரில்லாத இன்னொரு இனம் தனது விடுதலைக்காப் போராடும் தகுதியே அற்றது"

"என்ன சும்மா அடையாளம் அது இது எண்ணுறாய். அரசாங்கம் செய்யிறது பொய்ப்பிரச்சாரம் இல்லையா?"

"பொய்ப் பிரச்சாரமாக இருக்கட்டும். ஆனால் அது உண்மையாக இருந்தாலும் வியப்பில்லை. 'அடையாளம்' என்பது எவ்வளவு தூரம் உணர்வு பூர்வமானது என்பது உனக்குப் புரியவில்லையா? தமிழன் வணங்கும் கோவில் என்பதற்காக ஒரு சைவக் கோயிலை இராணுவம் உடைத்தால் உனக்கு எப்படி இருக்கும்?"

"எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை"

"உது விதண்டாவாதம். சரி, யாழ்ப்பாணம் நல்லூர்க் கோயிலை உடைத்துவிட்டு ஒரு புத்த கோயிலை வைத்தால்.. வேண்டாம் திரும்பவும் கோயில் உதாரணம். றத்மலானை இந்துக் கல்லூரியை உடைத்தபோது நீ என்ன சொன்னாய்?"

"அது கலவர நேரம். தமிழன்ரை எல்லாத்தையும் உடைச்சவங்கள்தானே!"

"இதுதான் அடையாளம் என்கிறது. தமிழர்களுடையவை என்றிருக்கும் எல்லாவற்றையும் அவமதிப்பது, அழிப்பது.. அந்த வேலையில் எமது இயக்கங்கள் ஈடுபடவில்லையா? ஈரோஸ் முதல் புலிகள்வரை அனைத்து இயக்கங்களும் முஸ்லீம் மக்களைக் கொன்றிருக்கின்றன. ஒரு தனிப்பட்ட முஸ்லீமைக் கொல்வது கொலை. அதற்கு இனச் சாயம் பூசத் தேவையில்லை. ஆனால் முஸ்லீம் பள்ளிவாசலுள் இராணுவ உடையுடன் புகுந்து துப்பாக்கியால் மிரட்டுவது, கொல்வது என்பன இனக்கொலையல்லாமல் வேறென்ன?"

"அப்ப என்னதான் சொல்கிறாய்?"

"இது தம்பி எங்கடை தமிழரசுக் கட்சி காலத்திலையிருந்து 'தொப்பி பிரட்டி' என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லிச் சொல்லி பேதம் காட்டிவந்த விசயம். முஸ்லீம்மக்களின்ரை தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களின் சனநாயக உரிமைகளை வழங்கி ஐக்கியப்பட்டால் ஒழிய அஸ்ரப் போன்றவர்களும், அரசும் தமிழ்- முஸ்லீம் மக்களிடையே மேலும் மேலும் பிளவை ஏற்படுத்துவதை தவிர்க்கமுடியாது. அப்படிப் பிளவுபட்டு போராடுவதன் மூலமாவது தங்கள் இன அடையாளத்தை நிலைநாட்டவே முஸ்லீம்கள் விரும்புவர்"

"இப்ப என்ன செய்யிறது அப்ப.."

"ஒன்றும் செய்யேலாது. செய்ய உன்னிடம் இருக்கிறதாதுவக்கு? முடிந்தால் தமிழ்- முஸ்லீம் மக்களிடையே ஐக்கியத்தை வலியுறுத்துவது, முஸ்லீம் மக்களின் இன அடையாளத்தை மதிப்பதோடு சம்பந்தப்பட்டது என்று இயக்கங்களுக்குச் சொல்லு. அவர்கள்தான் ஏதாவது செய்யவேண்டும்"

நான் என்னமுடியும் என்று தெரியாமல் யோசித்துக்கொண்டிருந்தேன்.


இன்றைய பேப்பரில் மேல்மாகாணசபை உறுப்பினர் இலியாஸின் பேச்சு வந்திருந்தது. அவர் சொல்கிறார்:

... முஸ்லீம்களின் கொலைகளுக்குப் புலிகள் மீது முழுக்க முழுக்க குற்றம் சுமத்த முடியாது. அது தமிழ்- முஸ்லீம் மக்களைப் பிளவுபடுத்த சில தீயசக்திகள் செய்யயும் முயற்சி ....

இதைப்படித்த போது கொஞ்சம் தெம்பாக இருந்தது ஆனால் இன்னொரு செய்தியும் என் கண்ணில் பட்டது:

அக்கரைப்பற்றில் வவுனியாவிலிருந்து திரும்பிய 14 முஸ்லீம்களை புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் கொன்றுள்ளார்கள்..

நான் இடிந்துபோய் உட்கார்ந்திருக்கிறேன்.



www.tamilarangam.net

நோர்த்றைன் மாநிலத்தில் இம்மாதத்திலிருந்து அரசியல் தஞ்ச அகதிகளுக்கு ரொக்கப் பணம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பொழுது சார்லாண்டில் நடைமுறையில் இருக்கும் "சமூக உதவிப் பணத்திற்குப் பதிலாக பொருட்களை வாங்குவதற்கான பத்திரங்களை அரசியல் தஞ்சம் கோரிய அகதிகளுக்கு வழங்குதல்" நோர்த்றைன் வெஸ்ற்பாலின் மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேற்கு ஜேர்மெனியின் அடிப்படையான அரசியல் தஞ்சச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "அரசியல் அடக்குமுறைக்கு உட்பட்வர்கள் மேற்கு ஜேர்மெனியில் அரசியல் தஞ்சம் பெற்றுக் கொள்ளலாம்" என்பதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அண்மைக்காலமாகக் கூறி வரும் எஸ்.பி.டி. கட்சியின் பிரதம மந்திரி வேட்பாளரும், சார்லாண்ட் மாநில முதலமைச்சருமான லாபொன்ரைன்இன் ஆலோசனையை ஏற்றுக் கொள்ள நோர்த்றைன்வெஸ்ற்பாலினில் — றௌவ்வின் அரசு மறுத்துள்ள போதும் சார்லாண்ட்டில் உள்ளது போலவே ரொக்கப் பணத்திற்குப் பதிலாக பொருள் உதவியை மட்டுமே அகதிகளுக்கு வழங்குமாறு தன் நகராட்சி மன்றங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறாக அகதிகளுக்கான நெருக்குவாரங்களைக் கொடுப்பதன் மூலம் "போலி" அரசியல் அகதிகளையும், அகதிகள் இறக்குமதி முகவர்களின் செயல்களையும் பெருமளவு கட்டுப்படுத்த முடியுமென றௌவ்வின் அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# காசுக்குப் பதிலாக இனி பொருட்கள்!

"அரசியல் அடக்கு முறை நடைபெறவில்லை என்று பொதுவாகவே அறியப்படுகின்ற ஒரு நாட்டினைச் சேர்ந்தவர் அரசியல் தஞ்ச விண்ணப்பமே கொடுக்க முடியாது" என்ற மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற லாபொன்ரைனின் ஆலோசக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லை றௌவின் மந்திரிசபையால் வரவேற்கப்படவில்லை. அன்றியும் அரசியல் தஞ்ச அடிப்படை சட்டத்தின் மாற்றத்திற்கே தாம் மறுப்புத் தெரிவிப்பதாக மந்திரிசபை கூறியுள்ளது.

அகதிகள் அதிகமாக உள்ள இடத்தினை ஐதாக்கும் உடனடி நடவடிக்கையாக சென்னஸ்ரட் எனும் இடத்தில் இருக்கும் நேட்டோ துருப்புகளால் பாவிக்கப்பட்ட கட்டிடம் அகதிகளுக்கான முகாமாக மாறவிருக்கின்றது. இதற்காக இவ்வருடம் 40 இலட்சம் மார்க் ஒதுக்கப்பட்டுள்ளது.

புன்டஸம்ற் ஸ்ன்டோவின் வெளி அலுவலகம் ஒன்று இவ்விடத்திலேயே அமைக்கப்பட்டு அரசியல் தஞ்ச விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இம் முகாமில் றொக்கப் பணம் ஏதுமின்றி முழுவதும் பொருட்களாகவே வழங்கப்பட்டு அகதிகளின் தேவைகள் நிறைவேற்றப்படும்.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்)

## காயமேற்படாது! களைப்பு வராது!!

**கோபால்**

ஒரு சிகையலங்கார நிலையத்திற்கு அரசர் காலத்துப் போர்வீரர் உடையணிந்த ஒருவர் வருகிறார். அவருக்குச் சவரம் செய்ய ஆயத்தம் செய்தபடி சிகையலங்காரத் தொழிலாளி பேச்சுக் கொடுக்கிறார்.

தொழி: போர்க்கால கவச உடைகள் அணிந்திருக்கிறீர்கள். போரிலிருந்து வருகிறீர்களா?

போர்: ஆம்.

தொழி: ஆனால் உங்களைப் பார்த்தால் போரில் ஈடுபட்டவர் மாதிரித் தெரியவில்லையே? காயங்களையோ, இரத்தக்கறையையோ காணவில்லை. களைப்பும் இல்லை. எப்படி.. ?

போர்: முன்பு போல் இப்போது கொலனிகள் இல்லாததால் எங்களுடைய போர் முறைகள் மாற்றப்பட்டுள்ளன. தற்போதைய போர் முறைகளினால் எங்களுக்குக் காயமேற்படாது களைப்பு வராது. மரணமும் ஏற்படுவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழி: அப்படியானால் இப்போது கொலனிகள் இல்லையா? கொலனிகள் இல்லையானால் போர் எதற்கு?

போர்: கொலனிகள் என்ற பெயர்தான் இல்லை. மற்றப்படி அந்த நாடுகள் அதே நிலையில்தான் இன்னும் இருக்கின்றன. இப்போது அந்த நாடுகளை நாங்கள் மூன்றும் உலக நாடுகளென பெயர் மாற்றி அழைக்கின்றோம்.

தொழி: பெயர் மாற்றப்பட்ட இந்த மூன்றும் உலக நாடுகளுடன் இப்போது புதிய முறையில் போர் செய்வதாக முன்னர் கூறினீர்கள். அவை என்ன புதிய முறைகள்?

போர்: (மீசையை முறுக்கியபடி) பல முறைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒரே முறையில் சொல்லிவிடமுடியாது. உதாரணமாக இந்நாடுகள் கொலனிகள் என்ற பெயர் பெற்றிருந்த காலங்களில் நடைபெற்றதைப் போல இப்போது நாங்கள் இந்த நாடுகளுக்குச் சென்று போரிடுவதில்லை. நாங்கள் இங்கிருந்துகொண்டு ஆயுதங்களை மட்டும் இந்த நாடுகளுக்கு அனுப்பி வைப்போம்.

தொழி: ஆயுதங்களை மட்டுந்தான் அனுப்பி வைப்பீர்களா? நீங்கள் போவதில்லையா? அதெப்படி? ஆயுதங்கள் தாமாகச் சண்டை பிடிக்குமா?

போர்: (சிரிப்பு) அப்படி இல்லை. நாங்கள் அனுப்பும் ஆயுதங்களை வைத்து அந்தந்த நாட்டிலிருப்பவர்கள் தங்களுக்குள் தாங்களே மோதிக் கொள்வார்கள். இல்லையென்றால் மற்றவர்களுடன் மோதுவார்கள்.

தொழி: அதெப்படி அவர்கள் தங்களுக்குத் தாங்களே அடிபட்டுக்-கொள்வார்கள்?

போர்: (சிரிப்பு) அவர்களுக்கிடையில் நாங்களே பிரச்சினைகளை உருவாக்கிவிடுவோம். இருக்கும் பிரச்சினைகளைக் கிளறிவிடுவோம். சண்டைகளை நன்றாக ஊக்குவிப்போம். அவர்களை ஒன்றுபடவிடாமல் பிளவுபடுத்தி வைப்போம். எங்களின் நோக்கங்களுக்கு உதவுவதற்காக அவர்களில் பலரை எங்களின் சேவகர்களாக்கி, கூலி கொடுப்போம்.

தொழி: எல்லாம் சரி. அந்த நாடுகள் வறிய நாடுகள்தானே? உங்களிடமிருந்து ஆயுதங்களை வாங்கக்கூடியளவிற்கு அவர்களிடம் ஏது பணம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர்: (சிரிப்பு) இது ஒன்றும் சிரமமான விடயமல்லவே. நாங்கள் பல நிதி நிறுவனங்கள் வைத்திருக்கிறோம். இதன் மூலம் மூன்றும் உலக நாடுகளுக்கு நிதி உதவி செய்வோம். பிறகு அவர்கள் அந்த நிதி உதவியைக்கொண்டே எங்களிடம் ஆயுதங்கள் வாங்குவார்கள். அந்த நாடுகளிலுள்ள மூல வளங்களை எடுத்துக்கொண்டு ஆயுதங்களைக் கொடுப்போம். ஆயுதங்களை இலவசமாகக் கொடுத்தாலும் எங்களுக்கு இலாபம்தானே?

தொழி: சரி. உங்களிடம் ஆயுதங்கள் வாங்கி அவர்கள் தங்களுக்குத் தாங்களே அடிபட்டுக் கொள்கிறார்கள். அதன் பின்?

போர்: இதென்ன கேள்வி! ஆயுதங்களை விற்றுப் பணம் சம்பாதிப்போம். மூன்றும் உலக நாடுகளிலுள்ள மூலவளங்களை எடுத்து எங்களுக்காகப் பயன்படுத்துவோம். எங்களுக்கெதிரானவர்களை அந்தந்த நாடுகளில் உள்ளவர்களை வைத்தே -கொன்றொழிப்போம். இதைவிட ஒரு கட்டத்தில் அந்த நாட்டு அரசுகள் தாமாகவே எங்களை அங்கு வரும்படி மண்டியிடும். பிறகென்ன, அங்கயேபோய் விருந்தாளிகளாக தங்கிவிடுவோம்.

தொழிலாளி சவரம் செய்வதை நிறுத்திவிட்டு சவரக் கத்தியை அப் போர்வீரனின் கழுத்தில் வைக்கிறான்.

---

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தொடர்ச்சியான அரசியல் தஞ்ச வழக்கில் தனித்தொரு நீதிபதியே முடிவுகளை வழங்கக்கூடிய வாறு நடைமுறை இருக்க வேண்டும் என்ற றௌவ்வின் மந்திரிசபை விருப்பம் இன்னும் பரிசீலிக்கப்படுகிறது.

எப்படியிருந்தபோதும் நடைமுறையில் றௌவ்வினதும், லாபொன்ரைனதும் ஆலோசனைகளும் அதிகம் வேறுபடவில்லை என்பதும், அரசியல் தஞ்சம் கோரி வந்த அகதிகளை மனிதாபிமான மற்றமுறையில் மறைமுக நெருக்கடிகளின் மூலமாக வெளியேற்றவே ஆளும், எதிர்கட்சிகள் முனைகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

• குணேந்திரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுகனின் இரண்டு நூல்கள்

## "பஞ்சமியில் செத்தவர்களும் வாழ்வும்"

பள்ளத்தில் வெளியாகியுள்ள இக்கதை சுகனுக்குத் தெரிந்த, நமக்குச் சுவாரஸ்யமான கிராமியப் புதினங்கள் பல அடங்கிய மூதற் பகுதியையும், பேய்க லைத்துப் பிழைக்கும் பூசாரியின் ஜாலமென்ற இரண்டாவது பகுதியையும் உள்ளடக்கியுள்ளது.

கிராமத்து அனுபவங்களை இயல்பு கெடாமல் அப்படியே தருவதில் சுகனின் திறமை இக்கதையில் இன்னும் பளிச்சிடுகின்றது. சுகனிடம் நன்றாகவே ஒட்டியிருக்கின்ற மண் இத் திறமையை அவருக்குத் தந்துகொண்டேயிருக்கும்.

பாத்திரங்களின் பேச்சின் ஊடாகவே யதார்த்த உலகின் வழக்கமான பரிமாணத்தைவிட்டு வேறொரு பரிமாண நோக்கை வாசகனிடத்தில் ஏற்படுத்துவது என்பது ஒரு படைப்பாளிக்குப்-போலியற்ற அனுபவங்களும், சமூகத்தின் மீதான ஆழ்ந்த அக்கறையும் சேர்கின்றபோது தான் கைகூடுகின்றது.

"ஒரு ஆட்டி லை, மாட்டி லை போவமெண்டில்லை, கோழியிலை போறுய். கோத்தையின்-ரை......யிலை போ!" என கதை முடிகின்றபோது, இத்தனை ஆரவாரங்களும், தூசனங்களும், கிரியைகளும் ஒரு பம்மாத்து மட்டுமல்ல, அதனூடு ஆண் ஆதிக்க பெண்ணடக்குமுறைத் தன்மைகளும் கூட தெரிவதை வரிக்கு வரி நாம் காண முடியும்.

சாத்திக் கிழவனுக்கும் அவனுடைய உதவியாளனுக்கும் இது கைவந்த கலை. சாதாரண அபவாதப் பேச்சுகளை அபவாதம் என்று முகம் சுழித்து, விலகிப் போகும் சமூகம் அதையே பேயோட்டி சொல்லுகின்றபோது






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்கு நசிந்து கொடுத்து அங்கீகரிப்பதை நம்மில் பலபேர் கண்டிருப்போம்.

சாத்திக் கிழவனுக்கு இது எப்படிக் கைவந்த கலையோ, அவ்வாறே இதுதான் மருந்து என்ற அங்கலாய்ப்பும் பலரின் கண்களை இன்னும் மறைத்துக் — கொண்டுதான் இருக்கிறது. நர பலி கேட்டு கோழியில் அடங்கி போகும் இந்தப் பட்டப் பகற் திருட்டு இக்கதையில் ஒரு குறி யீடேதான்.

சாத்திக் கிழவனின் கதை சொல்லப் புறப்பட்ட சுகன் அதையொட்டிய, சாத்திக் கிழவ னின் செய்வினை, சூனிய விளையாட்டு, இதற்கான பலம் கிழவனுக்கு எங்கிருந்து வருகிறது என்ற கிராமத்தவர்களின் ஆராய்வின் பேரில், தலைச்சன் ஆண் குழந்தைச் சவத்தைத் தலைகீழாகக் கட்டித் தூக்கி தலையிலே செப்பாணி அடித்து வழிகின்ற ஊனத்திலிருந்து பெறப்படுகின்றது என்ற அவர்களின் ஊகம்.. என்று ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள விடயங்களையே தொட்டிருந்தாலும் இவற்றின் தொடர்புகளை மை போட்டுத்தான் கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது.

மேலும் இந்தத் தொடர் புகளில் ஒரு வளர்ச்சிப் போக்கினைக் காணமுடியாமல் ஒவ்வொரு செய்திகளும் பிரிந்து, பிரிந்து வெவ்வேறாகி நிற்கின்றன.

பஞ்சமியில் செத்த மாரி முத்துக் கிழவனில் இருந்து மாவுக்குத் தாவி, பின் பூதிக்குத்தாவி சுடலைக்கு வந்து, குழந்தைப் பிணத்துக்கு வந்து, அதிலிருந்து கல்லுக்குத் தாவி... நல்லகாலம் பூசாரி சாத்திக் கிழவனை சுகன் பிடித்துவிட்டார்.

இந்தச் சிறுகதையின் முன் பகுதியாக நான் கூறு பிரித்துக் காட்டிய பகுதி வெறுமனே வித்தியாசமான கிராமியத் தகவல்களே. இத் தகவல்களை முற்பகுதியில் கொடுப்பதன் மூலம் ஒரு குழப்ப நிலையில் இருந்தே ஒவ்வொரு வாசகனும் தொடர்ந்து வாசிக்க சுகன் வழிவகுத்திருக்கின்றார்.

பஞ்சமியில் செத்த மாரி முத்துக் கிழவனின் ஒரு காதருகில் கோழிக்குஞ்சு, மறு காதருகில் சுருட்டுக்கட்டை... என்று

## பசுபதி சிவலிங்கம்

கதை ஆரம்பிக்கின்றபோது சுருட்டுக்கட்டை, கோழிக்குஞ்சு என்பவை ஏதோ முக்கியமான ஒரு தொடர்பை இக்கதையில் காட்டப்போகின்றன என்றே நான் நினைத்தேன். அந்தமாதிரியான பூச்சாண்டியைத்தான் இந்த முன் பகுதியில் பல விபரணைகள் காட்டி நிற்கின்றன.

சிலவேளை இந்தக் கதையை இன்னும் கொஞ்சம் ஊர்ப்புதினம் ஆராய்வதுபோல் ஆராய்ந்தால்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாரிமுத்துக் கிழவனும் சாத்திக் கிழவனும் சொந்தக்-காரர்கள். மாரிமுத்துக் கிழவனின் தகப்பன் பூதி. மாரிமுத்துக்கிழவனின் அண்ணன் பிறந்து 6 மாதத்தில் தலைப்பிள்ளையாய் செத்துப்போக, அந்தப் பிரேதத்தில் வழிந்த கரும சண்டாளமையை அந்தக் காலத்திலேயே எடுத்த சாதிக்கிழவனுல் மாரிமுத்துக் கிழவனுக்கோ அல்லது அவன் தகப்பன் பூதிக்கோ எப்பொழுதோ நாசமாகப் போகச் செய்வினை செய்யப்பட்டுவிட்டது.

அதனுல்தான் பூதி கடலோடு போக, மாரிமுத்தும் பஞ்சமியில் சாகவேண்டி வந்திருக்கும். மாரிமுத்து மற்றவர்களுடன் சேர்ந்து ஆட்டின் விதை அறுத்தமைகூட இந்த விரோதங்களுக்கு காரணமாக இருக்கலாம்.

இவை போன்றெல்லாம் மக்களின் நம்பிக்கை இருந்து கொண்டேயிருக்கிறது. இவை ஒரு பயமாக ஊட்டப்பட்டதன் மூலம் -"தாய்ப் பாலோடு சேர்த்து ஊட்டப்படும் மதம் எனும் பய உணர்வு" (ப.ஜீவானந்தம்) - போல, பாவிகள் உழைப்பில் பாக்கியவான்கள் வாழ்கிறுர்கள்

இயற்கையும், இன்றைய சமூக அமைப்புகளும் வஞ்சகம் பண்ணும் "கீறப்படாத காகிதங்கள்" (மாவோ) கிராமத்து மக்கள்.

பொருள் இலாபம் பெறுவதற்காகவே திரிபு பெற்ற சமூகப் பழக்க வழக்கங்கள் - அவை மூடநம்பிக்கைகளாக இருந்தாலும்கூட - நாகூக்காக நாகரிகம் என்ற போர்வையில் பட்டினங்களில் செய்யப்படுகின்றன. அதே பழக்கங்கள் பலவும் மற்றும் பல மூட நம்பிக்கைகளும் ஆரம்பகால வடிவங்களோடு உருவும் வர்க்கத்தின் ஆதாயத்திற்கான வழக்கங்களாகவும் கிராமங்களிற் காணப்படுகின்றன. இந்த ஐரோப்பிய சூழலில் இவை அடிக்கடி மறந்துபோகும்

அதுமட்டுமல்ல, போலிச் சம்பிரதாயங்கள் பல எம்மை இன்னும் விடாது பற்றிக்கொண்டிருக்கும் - சுகனின் இதுபோன்ற கதைகள் அடிக்கடி சொல்லப்படவேண்டும். அடிக்குமேல் அடியடித்தால் அம்மியும் நகருமென்று பழக்கதோஷத்தில் பழமொழி வந்துவிட்டது. மன்னிக்கவும்.

**நமது குரல்**
Frauenkreis
IZDW
Overwegstr.31
469o Herne

**பள்ளம்**
K.Kanagasingam
39,Rue De La Jonquiere
75o17 Paris
Frankreich



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்பதற்கு
மட்டும்
உதடுகள் பிரித்து
உரத்து
உச்சரிக்கவே
உரிமையின்றி
போராட்ட
உரிமையாளர்கள்
உலைவைத்துவிட்டார்கள்.

இது எம் மண்ணில்.

உரிமைப் போராட்டத்தில்
உண்மையிலேயே (?!)
பங்குகொண்ட
அரசியல் அகதிகள்
நாம்.

அந்நிய நாட்டில்
அடக்குமுறையையும்
நிறவெறியையும்
அலட்சியப்படுத்திவிட்டு
அன்று கட்டிய
அடிமைத் தாலியை
கனதியுடன்
திரும்பக் கட்டலை
தனி குனிந்து
ஏற்பதை
வீடியோ எடுப்பதில்
மட்டுமே
எமது
கலாச்சார
விழுமியங்களைக்
காத்துக்கொண்டும்...






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதைப் பொருள்
தொடக்கம்
எய்ட்ஸ் வரை
சேர்த்தலில்
நாகரிக முன்னேற்றங்களைக்
கொண்டவர்களாயும்...

உலோகம் காய்க்கும்
உடம்புகளாகவும்...

நாட்டில்
நடந்துகொண்டிருக்கும்
கொலை வெறியையும்,
கதிரைப் போட்டியையும்
நியாயப்படுத்தி
விடுதலை வீரர் (?!)
மரணக் கலாச்சாரத்திற்கு
இங்கேயும்
மதில் கட்டிக் கொண்டும்...

சீர்கெட்டு,
தறிகெட்டு,
சிந்தனையின்றி...

பயணப் பத்திரங்கள்
பலமானவையானாலும்
உழைப்பை
உறிஞ்சிய பின்
உதவா நிலையில்
சொந்த நாட்டிற்கே
விரும்பியும்
விரும்பாமலும்
அனுப்பப்படுவது மட்டும்
விலக்கற்றது.

முடிவின்றிய
துயர வாழ்வு
எம்மோடு
முடியட்டும்.

நாளைய மனிதர்களுக்காவது
நல்ல காலைகள்
புலர்வதற்கு
இன்றைய
அஸ்தமனங்களில்
இயன்றவரை
உழைப்போம்.

# செய்திக் குறிப்பு

## 01.07.90

மன்னாரில் கடைகள் மூடப்பட்டுள்ளன. மக்கள் உணவுப்பொருட்களுக்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர். கடற்படையினரது ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப் பட்டிருப்பதால் மீனவர்கள் தொழிலிழந்துள்ளனர்.

அடம்பனில் 3 சிறுவர்கள் செல்வீச்சில் கொல்லப்பட்டுள்ளனர்.-

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கைது செய்யப்பட்டவர்களில் 89 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட தீவிரவாதச் செயல்களில் 1,075கோடி - ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தற்போது வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு 500 கோடி ரூபா தேவைப்படுகிறது - பிரதமர்

போதிய காரணங்களின்றி தோட்டப்புற இளைஞர்களை திடீர் திடீரென கைது செய்வதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கோரியுள்ளது.

வர்த்தகர்கள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. எவருமே கோழைகளாக - வாழவும் கூடாது. உங்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்தால் அது தொடர்பான நடவடிக்கைகளை நான் மேற்கொள்ளுவேன் - தொண்டமான்

எமது அரசும் நச்சு வாயு பாவிக்கிறது என்ற பொய்ப் பிரச்சாரத்தை ஏனைய நாடுகள் நம்பமாட்டாது என்பது எமது நம்பிக்கை - பிரேமதாச

இலங்கைக்கு நன்கொடையாக - ஜப்பான் ரூபா 85 கோடி வழங்கியுள்ளது.

## 02.07.90

எந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோமோ அந்த மக்கள் கொல்லப்படுவதை, கைது செய்யப்படுவதை தடுக்க முடியவில்லை. அவர்களின் சொத்துகள் அழிக்கப்படுவதைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் எதிர்நோக்கும் பட்டினிச் சாவைத் தடுக்க முடியவில்லை. இந்த நிலையில் கையாலாகாத இந்த எம். பி. பதவிகள் எமக்கு எதற்கு? - ஈரோஸ்

ஐ. நா. இந்து சமுத்திரக் கமிட்டியிலிருந்து வெளியேறியுள்ள அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளை மீண்டும் அதில் சேர்த்துக்கொள்ள இலங்கை முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது.

மக்கள் மீதான தாக்குதல்களைத் தூண்டிவிட்டு இலாபம் பெறும் புலிகளின் தந்திரத்தின் ஒரு பகுதிதான் மக்கள் நிறைந்த பகுதிகளில் தமது அரண்களை அமைத்துக் கொள்வதாகும். எனவே அரசாங்கம் இத் தந்திரத்தை முறியடிக்கும் விதத்தில் செயற்படவேண்டும். தமது பாசிச அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு புலிகள் ஆரம்பித்த யுத்தத்தில் அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் பயங்களை அனுபவித்து வருகிறார்கள். புலிகளிடமிருந்து தமிழ் பேசும் மக்களை மீட்டெடுக்கப் போராடும் சக்திகள் தமிழ் பேசும் மக்களை புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் இணைத்துக்கொள்ளும் வகையில் செயற்படவேண்டும். இராணுவத்தினரைத் தாக்குவதன் மூலம் ஆத்திரமூட்டி, இராணுவத்தினரின் பதில் தாக்குதலில் அப்பா



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வி மக்கள் பாதிக்கப்படும்போது அவர்கள் தமக்கு ஆதரவாளர்களாக மாறுவார்கள் என்று புலிகள் திட்டமிட்டுள்ளார்கள். மோதலும், கசப்புணர்வும், பதற்றமும் நிறைந்த சூழலைப் பாதுகாப்பதன் மூலமே தாம் ஜீவிக்க முடியும் என்று புலிகள் நம்புகிறார்கள். அன்றும் இன்றும் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது தான் புலிகளது செயல்முறையாகும். பாசிச புலிகளின் சதி முயற்சிகளை முறியடிக்க சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களும், ஜனநாயக சக்திகளும் விழிப்போடும், ஐக்கியத்தோடும் செயற்படுவோம் - டக்ளஸ் தேவானந்தா

நான் தங்களில் இன்னமும் நம்பிக்கையை இழக்கவில்லை. புலிகளின் செயலை சரி அல்லது பிழை என வாதாடுவது எனது நோக்கமல்ல. கிழக்கில் இராணுவம் மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை மாவட்டங்களில் மேற் கொள்ளும் பழிவாங்கல்களை உடனே நிறுத்துங்கள். யாழ்குடாநாடு மீதான விமானக்குண்டு வீச்சை உடனே நிறுத்துங்கள். கொழும்பில் உள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தம் தொகுதிகளுக்குச் சென்று வரவும், என்னைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்யுங்கள் -பாலகுமார் பிரேமதாசவுக்கு எழுதிய கடிதத்தில்.

முஸ்லீம் சமூகத்தின் மத்தியிலும் மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன. அவர்களும் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். முஸ்லீம் சமூகத்திற்கும் சுதந்திரம் வேண்டும் என்று சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் இதுவரைகாலமும் எடுத்துரைக்கப்படவில்லை. -மருதூர்கனி

வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த 413பேர் கொழும்பில் கைது செய்யப்பட்டு மகர சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மாவனல்லை சாகிறக் கல்லூரி மாணவர்கள் தமது 2 நாட்களுக்குரிய மதியபோசனப் பணத்தையும், ஆசிரியர்கள் தமது ஒருநாளைய சம்பளத்தையும் - தேசிய பாதுகாப்பு நிதிக்கென பிரேமதாசவிடம் ஒப்படைத்தனர்.

03.07.90

தமிழ்மக்களை அழிவுகளிலிருந்து காப்பாற்றுமுகமாக அரசும்-புலிகளும் யுத்தநிறுத்தத்திற்கு வரவேண்டும். யுத்தத்தை நிறுத்தி ஆயுதங்களற்ற சமாதானத்தை ஸ்தாபித்து சமாதான கலந்துரையாடல்களுக்கான நிலைமைகளை உருவாக்கி வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு அதிகாரப் பகிர்வினைப் பெறவைப்பதே நம் எல்லோரினதும் கூட்டுப்பொறுப்பாக இருக்கவேண்டும்- பிரேமச் சந்திரன்

அநுராதபுரத்திலிருந்து மன்னாரில் தாந்திரிமலை வரைக்கும் 3,000 எல்லைப்புற கிராம மக்களுக்கு ஆயுதங்களும் வெடிமருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன.

எல்.ரி.ரி.ஈ.யின் கடைசித் தலைவரைப் பிடிக்கும்வரை போராட்டத்தை நிறுத்தமாட்டோம் -பாதுகாப்பமைச்சர்.

அரசாங்கம் ஆரம்பித்துள்ள தேசியபாதுகாப்பு நிதிக்கென இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர்கள் சங்கஅங்கத்தவர்களான தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து தலா 15ரூபா வீதம் அறவிடுவதெனவும், சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களிடமிருந்து 10 ரூபாவுக்குக் குறையாத தொகையும், சங்க உத்தியோகத்தர்களிடமிருந்து 1 நாள் சம்பளத்தையும் அறவிடுவதென சங்க உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மனிதப் படுகொலைக்கு வழிவகுத்துள்ள யுத்தத்தை நிறுத்திவிடவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், யுத்த எதிர்ப்புக் குரல்களை வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் எழுப்பவேண்டும். தற்போது நடைபெறுவது அரசுக்கெதிரான எல்.ரி.ரி.ஈ. யின் கெரில்லா யுத்தமோ, அதை முறியடிப்பதற்கான அரசு முயற்சியோ அல்ல. மனிதப்படுகொலையே இரு தரப்பிலும் நடக்கிறது - புரட்சிகர மார்க்சியக்கட்சி.

தேசிய பாதுகாப்புக்கென 10,000 ரூபாவும், காயமடைந்த படைவீரர்களுக்கு 50,000ரூபா பெறுமதியான மருந்துவகைகளும் அகில இலங்கை பௌ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

த்த காங்கிரசில் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் நடந்த அசம்பாவிதங்கள் காரணமாக பட்டிருப்புப் பகுதியின் போரதீவைச் சேர்ந்த 28 கிராம மக்கள் அகதிகளாகிவிட்டார்கள். இவர்களின் சுமார் 300 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பலர் பலியாகியுள்ளனர். உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மற்றும் சுற்றுப்புறங்களில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சுமார் 70பேர் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேற்படி சிறைச்சாலை தற்போது இராணுவமுகாமாக மாற்றப்பட்டுள்ளது.

ஓமந்தையில் கிராமசபை தாவ்நிலைய கட்டிடம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டிடம் என்பன விமானக் குண்டுவீச்சுத்தாக்குதல் காரணமாக சேதமடைந்துள்ளன. இங்கு தங்கியிருந்த 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் அல்லோலகல்லோலப்பட்டுச் சிதறியோடினர். பலர் காயமடைந்தனர்.

புதுக்குளம் வீதியில் ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் நாம் எப்படியும் வெல்லவேண்டும். இந் நாட்டின் ஒற்றையாட்சிமுறைக்கும், இறைமைக்கும் எதிரான இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இந்நாட்டு மக்கள் அனைவருமே அரசுக்கு உதவவேண்டும். வடக்கு-கிழக்கு யுத்தம் முடியும்வரையில் எனது மாதாந்த சம்பளத்தை தேசியபாதுகாப்பு நிதிக்கு வழங்குகிறேன் - சப்பிரகமுவ மாகாணசபை உறுப்பினர்.

மாவலையில் அனல் மின்சாரநிலையம் நிறுவப்படுவதால் சூழல் அசுத்தமடைந்து மக்கள் நோயாளிகளாக மாறுவர். மக்களை நோயாளிகளாக மாற்றும் இந்த அனல் மின்சார நிலையத்தை நிறுவுவதற்கு 1,000 கோடி அல்லது ஈராயிரம் கோடி செலவு செய்தாலும் அதனால் என்ன பயன்? - தென் மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர்

இரத்தினபுரி மகாசமன் தேவாலயம், எகலியகொட, இரத்தினபுரி மக்கள் தேசியபாதுகாப்புநிதிக்கென14,50,000 ரூபா வழங்கினர்.

04.07.90

சம்மாந்துறைப் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு அங்குள்ள பல வீடுகள் தேடுதலுக்குள்ளானதுடன், முஸ்லிம் இளைஞர்கள் பலரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். கல்முனைப் பிரதேச பாதுகாப்பு ஒருங்கிணைப்புச் செயலாளர் பாண்டியராஜம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜே.வி.பி.யினரை ஒழித்ததைப்போல புலிகளை ஒழித்துக் கட்டுவோம். புலிகளுடன் போரிடுவதுதான் எனது நிலைப்பாடு - பாதுகாப்பமைச்சர்.

புத்தளம் பகுதியில் பாண்டியன், நிஜாம், என்ற புலிகளின் தலைவர்கள் உட்பட சுமார் 50பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

05.07.90

இலங்கையில் இருந்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 780 தமிழ் அகதிகள் மண்டபம் அகதி முகாமுக்கு வந்துள்ளனர்.

தள்ளாடி முகாமிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களால் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 15பேர் காயமடைந்துள்ளனர். மன்னாரில் 5,800குடும்பங்களும், தலைமன்னாரில் 1,800குடும்பங்களும் அகதிகளாகியுள்ளன.

06.07.90

500கோடி ரூபா பெறுமதிக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தோம். - பாதுகாப்பமைச்சர்

பாண்டிருப்பு, மருதமுனை முஸ்லிம் கிராமம் ஆகியன இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. 30 இளைஞர்கள் படையினரால் கொண்டுசெல்லப்பட்டு காரைதீவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்ப


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

07.07.90

அதிகாரப் பரவலாக்கல் மந்தகதியிலேயே இடம்பெற்று வந்திருக்கிறதென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் – நீதியமைச்சர்

மட்டக்களப்பில் சின்ன ஊப்பத்திரிச் சந்தி, இ.போ.ச.டிப்போச் சந்தி இருதயபுரம் ஆகிய இடங்களில் எரிந்த நிலையிலான சடலங்கள் கிடக்கக் காணப்பட்டன. மட்டக்களப்பு வாவியிலும் சடலங்கள் மிதந்து சென்றன.

கல்முனையிலிருந்து படையினரால் கொண்டு செல்லப்பட்ட 200பேரைப் பற்றிய தகவல்கள் இல்லை – மட்டக்களப்பு எம்.பி

முதூரில் இடம்பெற்ற மோதலில் 10 பொதுமக்கள் இறந்தனர். மேலும்பலர் காயமடைந்தனர்.

இந்திய அமைதிப்படை இருக்கும்போது நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் முறையற்றதென்றால், இந்தியப்படை இருக்கும்போது நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவையும் முறையற்றனவே. மாகாணசபைத் தேர்தல்கள் முறையற்றதெனக்கூறி அவற்றைக் கலைப்பதானால் ஜனாதிபதியும் பதவி நீக்கவேண்டும். பாராளுமன்றமும் கலைக்கப்படவேண்டும் – ஈ.பி.ஆர் எல்.எவ்

தற்போதைய போரிலே அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதுடன் மாத்திரம் எமது கடமை முடிந்துவிடவில்லை. போரில் பலியான போர்வீரர்கள், பொலிஸ் படையினர் பற்றி நாம் வேதனையடைகிறோம் – மட்டக்களப்புமாவட்ட த.வி.கூ. எம்.பி

இன்று நடைபெறும் யுத்தம் தமிழர்களுக்கெதிரானதல்ல, புலிகளுக்கு எதிரானதேயென்றும், நீதிக்கும், அநீதிக்கும் இடையிலான யுத்தம் என்றும் அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கம் கூறுவது எல்லாவற்றையும் கேட்கும்போது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அழிவதெல்லாம் தமிழ் மக்கள்தான். புலிகள் பின்வாங்கிவிடுகிறார்கள். அல்லது காட்டுக்குள் போய்ச் சேர்ந்து விடுகிறார்கள். அரசாங்கம் அப்பாவிகளைத்தான் வேட்டையாடுகிறது. கடந்த 25 நாட்களுக்குள் 1,000க்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். – வன்னி மாவட்ட த.வி.கூ. எம்.பி

வடக்கு மாகாணத்துடனை இணைப்பு நிலையிலிருந்து கிழக்கு மாகாணத்தை விடுவித்துக்கொள்ள இப்போது அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. முதலில் கிழக்கைத் துப்பரவு செய்துவிட்டு இலங்கைப்படைகள் வடக்குக்குச் செல்லவேண்டும். ஈழம் என்ற ஒன்று இருக்கமுடியாது. அது பற்றிய கேள்விக்கே இடமில்லாமல் செய்ய இப்போது பொன்னான வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதை அரசாங்கம் செவ்வனே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாகாணசபைமுறை முழுநாட்டிலிருந்தும் இல்லாமற் செய்யப்படவேண்டும் – சு.க.எம்.பி.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து வெளியேறி கந்தளாய்க்கு வந்துள்ள சுமார் 40,000 முஸ்லீம்கள் உணவு, மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி பரிதாபகரமானநிலையில் காணப்படுகின்றனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு தேவைப்படும்போது மட்டும்தான் அது முஸ்லீம்களுடன் அன்பாய், இரக்கமாய் நடக்கும். முஸ்லீம்களைத் தமிழ்ப் பயங்கரவாதிகள் அழித்தாலும், இந்தியப்படை இம்சைபடுத்திலும், புலிகள் வரி அறவிட்டு, வீடு, கடைகளைக் கொளுத்திச் சாம்பலாக்கி, முஸ்லீம்களைக் கடத்திக் கொன்றாலும் உதவிக்கு வராத இலங்கையரசாங்கம் கிழக்கைப் பிரிப்பதற்கு மட்டும் முஸ்லீம்களின் உதவியை நாடும் – பாராளுமன்றத்தில் மு.கா.எம்.பி

புனா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைவரும் வீரவில திறந்த சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

08.07.90

இரு வள்ளங்களில் தலைமன்னாரிலிருந்து இந்தியாவுக்குச் செல்வதற்குப் புறப்ப

www.tamilarangam.net

ட்ட 89 அகதிகள் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

09.07.90

வடக்கு, கிழக்கு மோதலை நிரந்தர உடனடியாக யுத்தநிறுத்தம் கொண்டுவரப்படவேண்டும். அதேவேளை இதைக் கண்காணிப்பதற்கு ஐ.நா.படை அல்லது காமன்வெல்த் சமாதானப்படையை அமைக்கவேண்டுமென த.வி.கூ.கோரியுள்ளது.

திருகோணமலையில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டும், சேதப்படுத்தப்பட்டும் உள்ளன.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 4ஆம் கொலனி மற்றும் 11ஆம் கொலனி மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. 35க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏனைய பகுதிகளுக்கு ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்துள்ள வெல்லாவெளி மக்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதிகள் இதுவரை அரசினாலோ, வேறெந்த நிறுவனங்களினாலுமோ வழங்கப்படவில்லை

மட்டு-அம்பாறை மாவட்ட எல்லைக்கிராமங்களில் இதுவரை சுமார் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

5ஆம் கொலனியிலுள்ள முஸ்லீம் பாட-சாலையொன்றில் தங்கியிருந்த அகதிகளை மிரட்டிக் கொள்ளையடித்த ஆயுத கோஷ்டியொன்று அங்கிருந்த இளம்பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்துவிட்டுச் சென்றுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைகளைத் தொடர்ந்து அவா மாகாணத்தில் தோட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுவருகின்றனர். வடக்கு-கிழக்குப் பிரச்சினைகளுக்கும், இவ்விளைஞர்களுக்கும் எவ்வித தொடர்போ, பொறுப்போ இல்லையாயினும் கைதுசெய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர்கிறது.

பேராதனை வளாகத்தைச் சேர்ந்த 2 மட்டுநகர் தமிழ் ஊழியர்கள் காணாமல் போயுள்ளனர்.

10.07.90

ஏறாவூரில் 2 முஸ்லீம்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர்.

ஒந்தாச்சி மடத்தில் 24 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.
களுவாஞ்சிக்குடிக்கு அருகில் வீடொன்றில் 2 இளம் பெண்களினதும், 2 இளைஞர்களினதும் சடலங்கள் அழுகிய நிலையில் கிடந்தன.

தொடர்ந்து நடக்கின்ற தேடுதல்வேட்டையில் சாதாரண மக்களே பாதிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கும், சித்திரவதைகளுக்கும் அப்பாவி மக்களே பலியாகின்றனர். கைது செய்யப்பட்டவர்களைக் காணவில்லை என்ற அலறல் ஒருபுறம், அவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்களே என்ற ஓலம் மறுபுறம். அகதிகளாக வருகின்றவர்களுக்கு நிவாரணம் கிட்டவில்லையே என்ற ஏக்கம் ஒருபுறம். இதுதான் தமிழ்ப்பிரதேசத்தின் இன்றைய நிலையாகும் -திசாமடுல்ல எம்.பி

தமிழ் பேசும் மக்கள் பேச விரும்புகிறார்கள். ஆனால் பேச முடியவில்லை. அவர்களின் நெற்றிப்பொட்டுக்கு நேரே துப்பாக்கிகள் நீண்டுள்ளன. -ஈ.பி.டி.பி.

மட்டக்களப்பின் சில வீதிகளில் 6 சடலங்கள்வரை கருகியநிலையில் காணப்பட்டன.

திருகோணமலையிலிருந்து காட்டு வழியாகவும், கடல் மார்க்கமாகவும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் அகதிகளாக வந்து தஞ்சமடைந்துள்ளனர்.

11.07.90

திருகோணமலையைச் சேர்ந்த 3700 முஸ்லீம்கள் அகதிகளாக அநுராதபுரத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது அப்பாவி மக்களே பாதிக்கப்படுவர். ஏனென்றால் அவர்கள் மக்களுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கு மத்தியிலிருந்தே போராடுகிறார்கள்
– யாழ் மாவட்ட எம்.பி

குருமன்காடு பகுதியில் ஒரு தாயும் அவரது 2 பெண் குழந்தைகளும் மண்வெட்டியால் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளனர்.

12.07.90

யாழ் நகரில் நடைபெறும் மோதல் காரணமாக யாழ்நகர முஸ்லீம்கள்பெருந்தொகையாக மதவாச்சிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

பேசாலை கடற்பகுதியில் 700 சிவிலியன்களுடன் 6 வள்ளங்கள் கடற்படையினரால் சோதனையிடப்பட்டு பேசாலைக்கு திசைதிருப்பப்பட்டுள்ளன.

இன்று வடக்கு–கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால் ஏழை, எளிய விவசாயிகள் தொழிலாளர்களின் பிள்ளைகளான சாதாரண போர்வீரர்களும், வடக்கு, கிழக்கில் உள்ள அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களுமே மடிகின்றனர். மக்களைக் கொன்று குவிப்பதன்மூலம் வடக்குக் கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து விடமுடியாது – சப்பிரகமுவ மாகாண சபையின் எதிர்க்கட்சி அங்கத்தவர்.

வறுமை காரணமாக வட்டேகொட என்ற இடத்தில் ஒரு தாய் 4 பிள்ளைகளுக்கு நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு தானும் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

13.07.90

காரைதீவுக் கிராமத்தில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு அழைத்துச்–செல்லப்பட்டோரின் 50க்கும் மேற்பட்டோரின் நிலைமை குறித்து இதுவரை தெரியவரவில்லை.

காரைதீவுக் கிராமத்தைச் சேர்ந்த 4பேர் வெட்டுக் காயங்களுடன் கிணறு ஒன்றில் சடலமாகக் கிடக்கக் காணப் பட்டனர்.

வவுனியாவில் முதல்நாள் இராணுவநடவடிக்கைகளின்போது வீட்டில் இருந்தவர்களும், வீதியில் சென்றவர்களுமாக10 பேர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கோடம்பாக்கத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் 13பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 5 இந்திய மீனவர்கள் தமிழகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களைப் பொலிசார் விசாரணை செய்ததில் புலிகளே இக் கொலைகளைத் திட்டமிட்டு நடத்தியதாகத் தெரியவந்துள்ளது.

நிந்தவூர் 5ஆம் குறிச்சியில் உள்ள இந்துக் கோயில் ஒன்றில் சடலங்கள் எரிக்கப்பட்டிருக்கும் சம்பவம், கல்லடிப் பாலத்தில் சிலர் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பாதுகாப்பமைச்சருக்குத் தெரிவிக்க ப்பட்டன.

14.07.90

அப்பாவி மக்களும், சிவிலியன்களும் பாதுகாப்புப் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு சுட்டு கொல்லப்படுவதாகவும், தீயிட்டு எரிக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.
– யாழ் எம்.பி

திருகோணமலையிலிருந்து வந்த 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் நெருங்கேணி லிங்கம் அரிசி ஆலையில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு ஊர் மக்களின் முயற்சியால் ஒருவேளை கஞ்சி மட்டுமே வழங்கப்படுகிறது.

இன்றைய நெருக்கடிக்குக் காரணம் அரசியல் சாசனத்திலே வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை வடக்கு–கிழக்கு மாகாணசபைக்கு வழங்காமல் மத்திய அரசு தாமதப்படுத்தி தவிர்த்துக்கொண்டதுமே என நாம் கருதுகிறோம்.
– ஈ.பி.ஆர்.எல்.எவ்

வவுனியா பகுதியிலிருந்து பல குடும்பங்கள் இந்தியா புறப்படத் தொடங்கியுள்ளன.

16.07.90

வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்தத்தினால் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படுகின்றனர். சொல்லொணாத்துயரங்களையும் மக்கள் அனுபவிக்கின்றனர். தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் பெருமளவில் அநாதைகளாகி ஆயிரக்கணக்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இடம்பெயர்ந்துள்ளனர் –பிரேமதாசா

கல்முனைப் பிரதேசத்திலுள்ள முகாம்களுக்கு விசேட அதிரடிப்படையினர் வந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலிருந்தும் அகதிகளாக அக்கரைப்பற்றுக்கு வந்து பாடசாலையில் தஞ்சமடைந்தவர்களுக்கு உணவு வழங்குவதற்கு யாரும் இல்லாததால் தஞ்சமடைந்துள்ள அகதிகள் பலர் இப்போது ஊர்மக்களின் வீடுகளுக்குச் சென்று பிச்சையெடுத்து சமைத்து உண்டுவருகின்றனர்.

மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் 68 முஸ்லிம் பயணிகள் கடத்திக் கொல்லப்பட்டிருப்பதாகவும், ஏறாவூரில் 62 முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளதாகவும் மு.கா.எம்.பி தெரிவித்துள்ளார். கடந்த சில வாரங்களாக ஏறாவூர் கல்குடாத் தொகுதிப் பிரதேசங்களில் புலிகளின் அடாவடித்தனங்கள் முஸ்லிம்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளதில் பலர் கடத்திக் கொலைசெய்யப்பட்டிருப்பதாகவும், உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு நிவாரணமாக ஏறாவூர் கிராமத்தில் இராணுவ முகாமை நிறுவவேண்டும் என்றும் இவர் குறிப்பிட்டார்.

சிறுபான்மை மக்களின் இன்றைய பிரச்சினையை ஜே.வி.பி.யை ஒழித்தது போல் டயர் மூலமோ, பதாகைகள் மூலமோ, பணம் திரட்டியோ முடிவுக்கு கொண்டுவர முடியாது. சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வே இப்பிரச்சினைக்கு முக்கியம் – வடமேல் மாகாணசபையில் மு.கா.உறுப்பினர்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவும், ஈ.என்.டி.எல்.எவ்.வும் சந்திப்பு நடத்தினர்.

17.07.90

மட்டக்களப்பு பகுதி வீதிகளில் 10க்கு மேற்பட்ட சடலங்கள் கிடக்கக் காணப்பட்டன.

புளொட் ஜாதக்கோஸ்டி சிறிமாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

அக்கரைப்பற்றுப் பகுதியில் ஆயுதப்படையினரின் வருகையைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட அப்பாவிகள் 37 பேரையும் விடுதலைசெய்யுமாறு கோரி அவர்களின் உறவினர்கள் கைச்சாத்திட்டு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

பேச்சுவார்த்தையில் ஈடுபடாதீர்கள். கொல்லுங்கள். கொல்லுங்கள். இத்தருணத்தில் பாதுகாப்புப் படைகளுக்குநாம் ஆதரவு நல்கவேண்டும் – திவயினவில் சிறிமா.

தெற்கு தீவிரவாதிகளுக்குக் கற்பித்த பாடம் வடக்குத் தீவிரவாதிகளுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது – மாகாண அபிவிருத்தி திட்டமிடல் அமைச்சர்

தோட்டத்துறையில் இருந்து அரசபடைகளுக்கு மேலும் 1,000பேரைச் சேர்த்துக்கொள்ள இருக்கிறோம். கடந்த 20 ஆண்டுகளாக இந்நாட்டில் அபிவிருத்தியைவிடப் பாதுகாப்பையே அதிகரிக்கவேண்டியுள்ளது. மேலும் உலகசந்தையில் தேயிலையின் விலை குறைந்துள்ளது இதனால் தொழிலாளர்கட்கு சம்பள உயர்வு வழங்கமுடியாதுள்ளது – பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். அதற்கு காரணமாகவுள்ள புலிகள் அழித்தொழிக்கப்பட வேண்டும் நெருக்கடிகளில் அவஸ்தைப்பட்டுக் – கொண்டிருக்கும் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என ஈ.பி.டி.பி இந்திய பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முஸ்லிம்களைத் தமிழர்களுடனோ அல்லது அரசாங்கத்துடனோ பகைத்துக்கொள்ள வைப்பதில் இருதரப்பாரும் போட்டி–போடும் நிலைமை வந்துகொண்டிருக்கிறது. இதனால் இன்னும் பல ஆயிரம் முஸ்லிம்கள் அகதிகளாகலாம் – மு. கா தலைவர்

வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் 13பேர் இராணுவத்தினரால் – கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நகரில் நாளுக்கு நாள் அரைகுறையாக எரிந்த சடலங்கள் வீதிகளிலும், வாவிகளிலும் கிடக்கின்றன. -

கல்லடி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள சுமார் 50 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கல்லாற்றுப் பகுதியில் 11 இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் - மட்டக்களப்பு மாவட்ட எம்.பி

18.07.90

இலங்கையிலிருக்கும் இந்தியப் பிரஜைகள் எவரும் தற்போதைய சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்ல வேண்டாமென இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் அக்கறை காட்டாமல் அவர்களை முற்றாக அழித்தொழிக்கும் நடவடிக்கைகள்தான் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. தற்போதைய போரிலே கிழக்கு மாகாணத்தில் 2,000க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். -யாழ் மாவட்ட த.வி.கூ எம்.பி

மன்னார்தீவு, முசலிப் பகுதி, நானாட்டான், அடம்பன், மருக்கோயில், திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு கடந்த 1 மாதகாலமாக அரசாங்கம் எந்த ஒரு உணவுப் பொருளையும் வழங்காமல் உள்ளது - வன்னி மாவட்ட எம்.பி

19.07.90

புனானையிலும், பெலவத்த முகாமிலும் சுமார் 100 மலையக இளைஞர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கிலுள்ள தங்கள் குடும்பங்களுக்குக் கடிதங்களை அனுப்ப விரும்புவோர் வழமைபோல் முத்திரை ஒட்டி முகவரியிட்டு தபால்களை அனுப்பி வைக்கலாம். அவ்வாறான தபால்கள் மத்திய தபாற் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவால் எடுத்துச்செல்லப்பட்டு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாத்தறைப் பகுதியில் 6பேர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்

20.07.90

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இதுவரை 2,500க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் ஆயுதப்படைகளினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். 6 இலட்சத்துக்கும் கூடுதலான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான கடைகள், வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னரும் கூட கொலைகள் குறையவில்லை. இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மட்டக்களப்பு லேக் வீதியில் 17.7.90 அன்று 27 இளைஞர்கள் டயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர். கோட்டைக்கல்லாறு சுற்றிவளைப்பின்போது ஏராளமானோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 21.06.90இல் காரைதீவில் குடும்பஸ்தர்களான 14பேர் ஒரே வீட்டில் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர். -பாராளுமன்றத்தில் வன்னி மாவட்ட எம்.பி

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை பற்றி யோசிக்காமல் போரைப் பற்றியே அரசாங்கம் பேசிக்கொண்டிருக்குமானால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற தமிழ்மக்கள் புலிகளிடம்தான் தஞ்சமடைவார்கள் - வாசுதேவ

அமைச்சர் கமீத் புலிகளுடன் மீண்டும் பேசுவதாக அறிகின்றோம். அரசாங்கத்தின் சம்மதத்துடன்தான் அவர் செயற்படுகின்றாரா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் - சு.க.எம்.பி

மட்டக்களப்பு தாளங்குடா கத்தோலிக்கத் தேவாலயத்தைச் சேர்ந்த அம்ரோஸ் என்பவர் காத்தான்குடியில் வைத்து பலத்த வெட்டுக் காயங்களுக்குள்ளாகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொத்துவில் கிரான்குளத்தில் 6 பேர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

## 21.07.90

இலங்கையில் இருந்து இந்தியாவுக்குப் பெருமளவில் அகதிகள் செல்ல நாம் அனுமதிக்கக் கூடாது – சிறிமா

இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து தமிழகத்தில் கடையடைப்பும், கர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

முஸ்லீம் காங்கிரசுடன் சேர்ந்துள்ள ஆயுதக்குழு ஒன்று முஸ்லீம்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே மோதல்களை உருவாக்கும் நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் இந்த ஆயுதக்குழுவினர் தமிழர்களைக் கொலைசெய்து வருகிறார்கள். கிழக்கு மாகாணத்தில் வீரமுனை என்ற இடத்தில் 20ஆம் திகதி 40 பேரைக் கைது செய்தவர்கள் அவர்களை வளத்தாப்பிட்டியிலே கொலை செய்து எரித்துவிட்டார்கள். அதே தினம் கல்முனையில் 75பேர் எரிக்கப்பட்டுள்ளனர். சம்மாந்துறையில் தலையன் தோட்டம் என்ற இடத்தில் 82பேர் எரிக்கப்பட்டுள்ளனர். நிந்தாவூர் 5ஆம் குறிச்சியில் 72பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். சில சடலங்களை முஸ்லீம்கள் உமியினுள் மூடியுள்ளனர். கல்முனைக்குச் சென்ற பி.பி.சி நிருபர், பாபுஜி என்ற ஐஸ்கிறீம் கடையொன்றினுள் 82மண்டையோடுகள் கிடப்பதைக் கண்டுள்ளார் – திகாமடுல்ல எம்.பி

மொனராகல குமாரவத்த தோட்டத்தில் தாக்குதலுக்குள்ளாகி தற்போது மொனராகல பாடசாலையொன்றில் தஞ்சமடைந்துள்ள தொழிலாளர் குடும்பங்கள் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் தராமல் மீண்டும் தோட்டத்திற்குச் செல்ல மறுத்துள்ளனர்.

எல்.ரி.ரி.ஈ யின் கோபத்திலிருந்து தப்புவதற்காக ஈரோஸ் எம் பி.கள் நாட்டைவிட்டு தப்பியோட முற்பட்டுள்ளார்கள். – பாதுகாப்பமைச்சர்

## 22.07.90

இலங்கைப் போக்குவரத்துச் சபைகள் 23.07.90 முதல் கலைக்கப்படும். இவை கலைக்கப்படுவதையடுத்து பஸ் போக்குவரத்துச் சேவையை கவனித்து செயற்படுத்துவதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும்.

## 23.07.90

அம்பாறை மாவட்டத்தில் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்திருப்போர் பலர் வயிற்றோட்ட நோய்க்கு இலக்காகி வருவதாகவும், பொத்துவிலில் உள்ள முகாமொன்றில் 4 பேர் மேற்படி தொற்றுநோயினால் மரணமடைந்துள்ளதாகவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அறிக்கையொன்று தெரிவிக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 50,000 சிங்கள, தமிழ், முஸ்லீம் அகதிகள் நீர், உணவு, மலசலகூட வசதிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர்.

5கோடி ரூபா செலவில் 25 யுத்த வாகனங்களைக் கொள்வனவுசெய்ய – பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தவிர அரபுநாடுகளிடமிருந்து மேலும் 6 யுத்த வாகனங்களை வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டநீடிப்பை எமது கட்சி இந்த முறையும் ஆதரிக்கும். பாதுகாப்புப்படைகள் யுத்தகளத்தில் பெற்ற வெற்றிகளை நான் பாராட்டுகிறேன் – மு.கா. எம்.பி

இந்த நாட்டில் தினசரி இடம் பெறுவரும் மனிதப்படுகொலைகளில் எம்மால் பங்கேற்க முடியாது. படுகொலைகளுக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும். அரசாங்கம் இன்று எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் – கேட்கிறது. அப்பாவி மனித உயிர்களை பறிப்பதற்கு எவ்வாறு நாம் ஒத்துழைப்பு வழங்க முடியும் – சு.க.எம்பி

## 24.07.90

ஈழவர் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த 11 பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது உறுப்பினர் பதவிகளிலிருந்து ராஜினாமாச் செய்தனர்.

கல்முனை இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சங்கரது பிள்ளைகளை விடுவிக்குமாறுகோரி பாண்டிருப்பைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தாய்மார் ஊர்வலமாகச் சென்றனர். இந்த ஊர்வலம் அதிரடிப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் ஆயுதப்படையினரால் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 7 தமிழ் மாணவர்கள் அநுராதபுரத்திலிருந்து பேராதனைக்கு இ.போ.ச. பஸ்ஸில் சென்ற வேளையில் நாவலப் பகுதியில் வைத்து பொலிசாரால் இறக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

25.07.90

மட்டக்களப்பில் அடிக்கடி எரிந்தநிலையில் வீதியில் சடலங்கள் கிடக்கக்காணப்படுகின்றன. மட்டக்களப்பு பாலத்தருகே 13 பிரேதங்கள் எரிந்த நிலையில் கிடந்தன. அநேக தமிழர்கள் எல்.ரி.ரி.ஈ என்ற ரீதியாக சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர் — மட்டு எம்.பி.

கல்முனைப் பிரதேசத்திலிருந்து இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் முஸ்லிம் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

பேசாலை, விடத்தல்தீவு போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள 30,000க்கும் மேற்பட்ட அகதிகள் உண்ண உணவின்றிப் பட்டினி கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பட்டினி காரணமாகக் குழந்தைகள் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் பலர் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

புலிகளை முறையாக ஜனநாயக வழிக்கு கொண்டுவர ஆவன செய்தேன். ஆனால் செம்மறி ஆடுகளை வீட்டு வளர்ப்புப் பிராணிகளாக பயிற்றுவிப்பதைப் போன்று புலிகளை வளர்ப்புப் பிராணிகளாக மாற்றுவது எளிதாக இருக்கவில்லை — பிரேமதாச

யாழ் கோட்டையைச் சுற்றியும் தற்போது துர்நாற்றம் வீசும் கழிவுப் பொருட்கள் ஆகாயத்திலிருந்து வீசப்படுகின்றன.

26.07.90

கருவாஞ்சிக்குடியிலும், வெல்லாவெளியிலும் குடியிருந்த மக்கள் எல்லோரும் அச்சம் காரணமாக வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர். படுவான்கரையின் பல்வேறு பகுதிகளிலும் அகதிகளாக உள்ள இவர்கள் இப் பகுதியில் கட்டிடங்கள் எதுவும் இல்லாததால் வெட்டவெளியிலேயே இரவும், பகலும் தங்கி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இன்றைய நிலைமைகளுக்கு புலிகள் மாத்திரமல்ல ஏனைய தமிழ்க் குழுக்களும் பொறுப்பாகும். தமிழ்க்குழுக்களிடையே காணப்பட்ட நிதானமின்மை, தடுமாற்றம், சுயநலப்போக்கு, பதவியாசை, விடாப்பிடியான விதண்டாவாதம் ஆகிய நிலைமைகள் தொடர்ந்துகொண்டுபோனதால் இன்று தமிழர்களும், முஸ்லிம்களும் அழிந்துகொண்டிருக்கிறார்கள் என்று

அம்பாறை மாவட்ட கிழக்குக்கரையோரப் பிரதேச விவசாயிகளின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஈரோஸ் அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளைத் துறந்துள்ளமை புலிகளது நிர்ப்பந்தம் காரணமாகவே தவிர ஜனநாயகத்தின் மீதான ஆர்வத்தினால் அல்ல என்று ஈ.பி.டி.பி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

27.07.90

மதவாச்சிப் பொலிஸ் பகுதியிலுள்ள எலவக்க எனும் கிராமத்தில் ஆயுதக்கோஷ்டியொன்று நடத்திய தாக்குதலில் 22 கிராமவாசிகள் கொல்லப்பட்டு, வீடுகளும் எரிக்கப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் 7 ஆண்கள், 6 பெண்கள், 9 குழந்தைகள் அடங்குவர். கொலை நடைபெற்ற இடத்தில் 'கறுப்புத் திராவிட இயக்கம் 1983' என கறுப்பு மையினால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் காணப்பட்டன.


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்கு, கிழக்கு, தெற்கில் 53 மணிநேரத்தில் 50பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கின் இன்றைய யுத்தத்தில் அகதிகளானோரைக் குடியமர்த்த மன்னாரை யுத்தமற்ற பாதுகாப்புப் பிரதேசமாக மாற்றுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயம் ஆகியவற்றுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

28.07.90

வீடு, வாசல்களை இழந்து, உறவினர் பலரை இழந்த மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அகதிகளாக வந்துள்ள அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அகதிகள் பட்டினிச் சாவை எதிர்நோக்கவேண்டியுள்ளது. பசி தாங்கமுடியாமல் அகதிச் சிறார்கள் தஞ்சமடைந்துள்ள கிராமங்களில் வீடுவீடாகச் சென்று பிச்சையெடுக்கின்றனர்.

29.07.90

சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்த வீரமுனையில் சுமார் 5,000 தமிழர்கள் உணவு, குடிநீரின்றி மிகவும் சிரமப்படுகின்றனர் அந்தக் கிராமத்தில் உள்ள 3 கிணறுகளிலும் நஞ்சு கலக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு யுத்தத்தில் பொதுமக்களின் உயிர்களும், உடைமைகளும் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், எல்.ரி.ரி.ஈ கிழக்கு வாழ் முஸ்லிம்களையும், எல்லைப்புற சிங்களவர்களையும் கொன்று குவித்துக்கொண்டிருப்பதை மனித நேயமுடைய எவரும் வன்மையாகக் கண்டிக்காமல் இருக்கமுடியாது. — ஈ.பி.ஆர்.எல்.எவ்

31.07.90

மட்டக்களப்பு, காத்தான்குடி ஆகிய பகுதிகளில் இயல்புநிலை அமைதி நிலவுகின்றபோதும் இன்னமும் கடைகளோ, வர்த்தக நிலையங்களோ திறக்கப்படவில்லை. போக்குவரத்துகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

தன்னாமுனை, ஆறுமுகத்தான் குடியிருப்பு, மயிலம்பாவெளி ஆகிய இடங்களில் சுமார் 35 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

ஆறுமுகத்தான் குடியிருப்புக் கடையொன்றில் எரிந்த நிலையில் 8 சடலங்கள் கிடந்தன.

அநுராதபுர மாவட்டம் உடும்பாவலை சின்னசிப்பிக்குளம் பகுதிகளைச் சேர்ந்த 10 முஸ்லிம்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டு பாழுங்கிணற்றுக்குள் போடப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும். புலிகள் மீது வீண் பழியைச் சுமத்தி அதன்மூலம் தமிழருக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே பகைமையை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு சிலர் இக்கொலையைச் செய்திருப்பதாக எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன — மேல்மாகாண சபை மு.கா.உறுப்பினர்

வடபகுதியில் இயங்கிவந்த சகல தமிழ் தீவிரவாத இயக்கங்களும் புலிகளைப் புரிந்து அவர்களின் செயல்களைக் கண்டித்து வருகின்றனர். இந்தியா கூட நிலைமையை நன்கு புரிந்து கொள்கிறது. இப்படியொரு புரிந்துணர்வை ஏற்படுத்திய பெருமை பிரேமதாசவையே சேரும் — போக்குவரத்து அமைச்சர்

33ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள 'கிழக்கு மாகாணத்தில்... 'என்ற பேட்டியின் தொடர்ச்சி 52 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

# கிழக்கு மாகாணத்தில்....

**கட:** அண்மைக்காலங்களில் தமிழ் - முஸ்லீம் கலவரங்கள் அடிக்கடி நடைபெற்றுவருவதற்கான காரணங்கள் என்ன?

**யுவி:** இயக்கங்களின் தலையீடுகளினால் தங்கள் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதாக முஸ்லீம்கள் கூறுகிறார்கள். இதே வேளை மேல் வர்க்க, வர்த்தக முஸ்லீம்கள் அரசுடன் தங்கள் சுயலாபம் கருதிக் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள். இவர்களில் பலரை அரசு ஆயுதபாணிகளாக்கி, ஆயுதப் பயிற்சியளித்துவருவதுடன் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டி வருகிறது.

இந் நிலையில் நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே தமிழர், முஸ்லீம்களுக்கிடையே தோன்றி விரைவில் அடங்கிவிடும் எல்லைப் பிரச்சினைகள் போன்ற சிறு பிரச்சினைகள் தற்போது பூதாகரமாக்கப்பட்டு, அவற்றிற்கு ஆயுத நடவடிக்கைகள் மூலம் பரிகாரம் தேடப்படுகிறது.

அரசு சார்புள்ள முஸ்லீம் குழுக்களின் தமிழர்களுக்கெதிரான ஆயுத நடவடிக்கைகளுக்கு 'கொலைக்கு கொலை' என்ற கொள்கையுடைய தமிழர் இயக்கங்களும் ஆயுதங்கள் மூலமே பதிலளித்து வருவதால் 'தமிழ் - முஸ்லீம்' கலவரங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. உண்மையில் இவை அரசு சார்பு முஸ்லீம்களுக்கும், தமிழர் இயக்கங்களுக்கும் இடையிலான சண்டைகளும், பழிவாங்கல்களுமே.

இம் மோதல்களில் பலியாகிக் கொண்டிருப்வர்களும், பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட அப்பாவி தமிழ், முஸ்லீம் மக்களே.

---

மட்டக்களப்பைச் சேர்ந்தவரும், மனித உரிமைச் சங்க உறுப்பினருமான யுவிராஜ் ஜேர்மென் பத்திரிகையாளர்களுடனான கலந்துரையாடலுக்காக இங்கு வந்திருந்த போது, குறுகிய நேரத்தில் சந்தித்துப் பெற்றுக்கொண்ட பேட்டி.

www.tamilarangam.net

# யாருக்காக இந்த யுத்தம்?

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பொன்றினை சில விரிவுரையாளர்களின் துணையுடன் ராஜனி ஸ்தாபித்து, அந்த அமைப்பின் அறிக்கைகளை சகல மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் சுற்றுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்

"ராஜனியைப் பொறுத்த வரையில் எங்கு மனித உயிர் பலியிடப்பட்டாலும், எந்தவிதமான கட்சி அல்லது இயக்க சார்புமின்றி அதனை அம்பலப்படுத்த-வேண்டும் என்று கருதினார். எல்லாவற்றிற்கும் மேலாக நாங்கள் மனித உயிர்களை மதிக்கிறோம் என்பதை வெளிக்காட்ட முனைந்தோம்" என்று இந்த அமைப்பைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் கூறுகிறார்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் செயற்பாட்டினைப்பற்றி விபரிக்கையில் ராஜனி பின்வருமாறு குறிப்பிட்டார்.

"ஒருபக்கச் சார்பின்மை சத்தியத் தேடல், விமர்சன ரீதியிலான நேர்மையான கண்ணோட்டம் என்பன எங்களின் இன்றைய சமூகத்தின் ஜீவாதாரமான அம்சங்கள். ஆனால் இத்தகைய ஒரு நிலைப்பாடு எங்களில் பலரது உயிரைக் காவு கேட்டு நிற்கிறது. மந்தித்துப்போன எங்கள் சமூகத்திற்கு ஒரு புத்தியக்கத்-தைக் கொண்டு சேர்க்கவே இத்தகைய ஒரு நிலைப்பாட்டை நாம் வரித்துக் கொண்டோம்!"

1987 ஜூலை மாதத்தில் அமைதியை நிலைநிறுத்த இந்திய அமைதிப்படை வந்திறங்கியதையடுத்து புலிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு வளர்ந்தது. ஆஸ்பத்திரிகளையும், அகதி முகாம்களையும் கூட விட்டு வைக்காமல் சகல இடங்களிலும் அப்பாவி மக்களைப் படுகொலை செய்தும், புலி எதிர்ப்பு இயக்கங்களுக்கும், அரச விரோத தமிழ்இராணுவ அமைப்புகளுக்கும் இத்தகைய படுகொலைச் செயல்களை குத்தகைக்குவிட்டும் இந்திய அமைதிப்படை மேற்கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட அட்டூழியங்களால் ஐ.பி.கே எவ் (I.P.K.F.) என்பது மக்களை கொன்றொழிக்கும் இந்தியப்படை என்றானது.

இந்திய அரசால் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்ட ஆயுதக்குழுக்களால் இராணுவ அமைப்புகள் நாடெங்கும் பெருகவாரம்பித்தன.

இந்தக் குழுக்களுக்கு இரண்டு விஷயங்கள் பொதுவாகவிருந்தன. ஒன்று கொலை பற்றிய குருட்டு வெறி. இது ஒவ்வொரு நபரையும் யாரோ ஒருவரின் எதிரியாக இனங்கண்டது.

மற்றது, விடுதலை என்ற பதாகைக்குள் அவை பதுங்கிக்கொண்டிருந்தன.

1987 அக்டோபரில் - யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் டாக்டர்கள், நோயாளிகள் உட்பட 70 பேரைச் சுட்டுக் கொன்ற இந்திய அமைதிப்படையின் படுகொலைச் சம்பவத்தை வெளியிடவோ, கொலை செய்யப்பட்ட தமது சக டாக்டர்களின் மரணத்தைப் பகிரங்கமாக நினைவஞ்சலி செலுத்தவோ முன்வருவதற்கு டாக்டர்களே பயந்துகொண்டிருந்தபோது, ராஜனி அந்தப் படுகொலை நிகழ்ச்சியின்போது உயிர்தப்பிப் பிழைத்திருந்தவர்களை நேரில் சென்று சந்தித்து விசாரணை மேற்கொண்டார். இந்த நேர் விசாரணையில்தான் கண்ட அநுபவத்திலிருந்து அவர் எழுதினர்:

"இரவு முழுவதும் இறந்துபோன சடலங்களின் கீழ் சத்தமில்லாமல் படுத்துக் கிடந்தோம். இதில் ஒருவனுக்கு இருமல் வந்து இரவில் லேசாய் முனகினன். இதைப் பார்த்த ஒரு இந்திய ஜவான் அவனை நோக்கி ஒரு குண்டை எறிந்தான். இருமிய அவனோடு சேர்ந்து வேறு கொஞ்சப் பேரும் அந்த இடத்திலேயே இறந்து போனார்கள்"

"இன்னொரு இடத்தில் கைகளை மேலே உயர்த்தியபடி ஒருவர் அழுதுகொண்டு உரக்கச் சொன்னர்:

நாங்கள் அப்பாவிகள். நாங்கள் இந்திராகாந்தி அம்மாவுக்குத்தான் ஆதரவு"

---

ஜோன் - மெரிட்

---

"அவனை நோக்கி ஒரு குண்டு எறியப்பட்டது. அவனும் அவனுக்கு அடுத்திருந்த அவனது சகோதரனும் அந்த இடத்திலேயே இறந்துபோனார்கள்"

"வெடித்த கிறனைற்றுகள் பயங்கர சத்தத்தை எழுப்பின. சிதறல் துண்டுகளும், தூசும் அப்படியே எங்கள் மீது படிந்தது. சற்று முன்னர்தான் இறந்துபோயிருந்தவர்களதும், காயமுற்றோரதும் வடியும் இரத்தத்தில் அவை அமுந்தப் படிந்து கொண்டன"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜனி தன்னோடு ஓரிரு பெண்களையும் சேர்த்துக்கொண்டு அந்தப் பகுதி முழுவதும் சைக்கிளில் சென்று இந்தப் படுகொலைகள் பற்றியும், சித்திரவதைகள் பற்றியும், பாலியல் வன்முறைகள் பற்றியும் தகவல்கள் சேகரித்தார்.

பாலியல் வன்முறைகள் பரவலாக இடம்பெற்ற பொழுதிலும் அவை வெளியில் தெரியவந்தால் ஏற்படக் கூடிய விளைவுகளால் அவை மூடி மறைக்கப்பட்டிருந்தன.

தாய்மாரதும், இளம்பெண்களதும் அநுபவங்களைக் கேட்டறிந்து அவர்களுக்கு ஆதரவு வழங்கி தன்னால் அவர்களுக்கு முடிந்தவரை உதவினார்.

"இங்கு பெண்கள் என்றால் நகைகளைத்தான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் ராஜனி சாகும் போது அவளிடம் ஒரு குண்டுமணி கூட இருக்கவில்லை. அவள் தன்னிடமிருந்த சகலவற்றையும் மற்றவருக்குக் கொடுத்துவிட்டிருந்தாள்" என்று அவரது தந்தை கூறுகிறார்

ராஜனி நம்பிக்கையிழந்து போன, ஆதரவற்ற பெண்களை ஒருங்கிணைத்து அவர்களை வலுப்படுத்தப் பெரிதும் பாடுபட்டார். "பூரணி" என்ற மையத்தை நிறுவி அங்கு பெண்கள் சுயசார்பு அடிப்படையில் தமது வாழ்க்கையை மீளமைக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்தினார்.

வட இலங்கையில் மிகவும் தனித்துவமான ஒரு அம்சத்தை நீங்கள் இங்கு காணலாம். ஆம், இங்கு பெண்கள் சேர்ந்து சிரிக்கிறார்கள்!

ராஜனி ஒரு சந்தர்ப்பத்தில் எழுதினார்:

"சாதாரண பெண்களுக்கு பெரும் துணிச்சலும், தனியே எதையும் எதிர்த்துப் போராடும் வல்லமையும், ஒற்றுமையாய் இயங்கவும் இயலும் என்பதை நான் நிச்சயம் நிரூபித்துக் காட்டுவேன்"

ராஜனியின் இத்தகைய பணிகளால் புலிகள் இவரைத் "துரோகி" என்று கருதினார்கள்

"இந்திய இராணுவவீரன் ஒருவன் இறந்தால்கூட ராஜனி அழுவாள்" என்று அவளைப் பற்றிச் சொல்லுவார்கள் என்று அவரது அம்மா சொல்கிறார்.

இந்தப் 'பூரணி' என்ற அமைப்பில் இருந்த சில இளம் பெண்கள் இப்போது புலிகளுக்குள் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

(தொடர்ச்சி அடுத்த கலத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

கிர்.. கிர்... கிர்..

காதுகளில் ஒலித்த அலாரத்தின் சத்தம் ஜனாவை தூக்கத்திலிருந்து எழும்ப வைத்தது.

'அதுக்கிடையில ஆறு மணியாச்சே!'


உடம்பு இன்னும் கொஞ்சம் தூக்கத்தை வேண்டியது. 'இது என்ன வீடே?வீட்டையென்றால் எப்பவும் எழுந்து கொள்ளலாமே' என நினைக்கையில்ஓர் ஆற்றாமை தோன்றியது. இன்றும் ஏச்சுகள் விழுமோ என மனசு தேம்பியது.

என் இந்த இரவுகள் விடியாமல் இருக்கக் கூடாது...? எல்லோரும் பொழுதுகள் புலராதா என ஏக்கப்பட நான் மட்டும் ஏன் இப்படி நினைக்கிறேன் என எண்ணுகையில் அவளுக்குத் தன்மீதே வெறுப்புத்தோன்றியது...

எப்படியோ எழுந்து வழமைபோல் வேலைகளில் கவனமானாள்.

வீட்டிலிருந்தவர்கள் ஒவ்வொருவராய் நேஸரி, கொலிஜ் ஒபீஸ்.. என்று கிளம்பிப்போக சில மணி நேரம் தனிமை கிடைத்தது.

'என்ன இது. சுற்றிச் சுற்றி ஒரே வேலையைச் செய்து கொண்டு... ஒரே ரீதியில் ஏச்சுகளை வாங்கிக்கொண்டு.. ஏன் இப்பிடி வேலை செய்யவேண்டும்... ?ஏன் இங்க நான்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிறன்?

என்னைப் போல் இன்னும் எத்தனை பேர் வறுமைத் துன்பத்தால் பிழைப்புத் தேடி வந்து இந்தமாதிரி சிறையில் அடைக்கப்பட்டு... தினமும் வார்த்தை சாட்டைகளால் அடிவாங்கிக் கொண்டு...'

ஜனுவால் மேலே நினைத்துப் பார்க்க முடியாமலிருந்தது யாருடனாவது மனம்விட்டுக் கதைக்க வேண்டும்போலிருந்தது. கண்களைச் சுழற்றிப் பார்த்தாள்.

'இண்டைக்கு போனைக் கூட உள்ளுக்க வைச்சுப் பூட்டிப் போட்டு போட்டாள்'

நேரம் நகர்ந்து கொண்டிருக்க, மாலை நேரத்துக்காய் மனசு தவம் செய்தது.

மணிக்கூடு அறிவித்து ஓய்ந்ததும் விஜேவையும், நிஷாவையும் அழைத்துக்கொண்டு ஜனு வீதிக்கு வந்தாள்.

அங்கு ஏற்கெனவே மெனிக்கா, சூரியா, சந்தியா, கிளாறு ... என்று தோழிகள் குழுமி நின்றனர்.

"சீக்கிரம் வாங்கோடி. இதில நின்றால் அவள் வந்து கதைக்கவிடாள்" ஜனு அவசரப்படுத்த, எல்லோரும் கணப்பொழுதில் அந்த அவெனியூவை விட்டு வெளியேறி இருந்தனர்.

ஜனு பூக்களை ரசித்து கொண்டு வந்தாள். மாலைப் பொழுதும், மலர்களும் அவள் மனசுக்குள் நிறையக் கலர் கனவுகளைத் தோற்றுவித்தன.

"அக்கா ஐ வோன்ற் ஏ பிளவர்" கேட்ட டெபனிக்கு கிளாறு ஓர் அறை வைத்தாள்.

"ஏனடி குழந்தைக்கு அடிக்கிறாய்?" சந்தியா கேட்டாள்

"பின்ன என்ன. மற்றதுகளுக்கு அடிக்க முடியுமே?"

"பெட்டை தாயிட்டைச் சொன்னால் என்ன செய்வாய்?"

"நல்லாய்ச் சொல்லட்டும். இனி அந்த வீட்டில என்னால ஒரு நிமிசம் கூடி வேலை செய்யமுடியாது. குழந்தையே இது. சரியான பிசாசு. நாள் முழுக்க படுத்திற பாடு போதாதெண்டு ரோட்டிலையும் கரைச்சல் தருகுதுகள்."

"ஏன் சீனத்தி என்னவாம்"

"கஷ்ரமாக் கிடக்கு. வீட்டைப் போகப் போறன் எண்டுறன். இடையில போறதெண்டால் உன்ரை காசிலைதான் அனுப்புவன் எண்டு அவள் பாவி சொல்லுறாள். எனக்கு இங்க வேலைசெய்ய முடியாது. ஏஜென்சிக்காறன் மாத்தி விடுகிறன் எண்டாலும் அவள் விடுறாளில்லை. நினைச்சால் வெறுப்பாய் கிடக்கு" கிளாறு சலித்துக் கொண்டாள்.

அவளின் ஆற்றாமைக்குப் பதில் சொல்லும் நிலைமையிலோ அல்லது ஆறுதல் வழங்கக் கூடிய நிலையிலோ யாரும் அங்கில்லை

எல்லோரும் கைதிக் கூண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டில் அடைபட்டவர்கள் போல்! சூழ்நிலை பாதகமாய் இருந்தது சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தன.

சிங்கப்பூரின் ஆரவாரங்களிலிருந்து அந்த வீதி நிறைய வேறுபட்டிருந்தது. வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிடக்கூடிய தாய் ஒருவகை நிதானம் இருந்தது.

"இதில இருப்பம்"

நித்தியகல்யாணி மரநிழலில் எல்லோரும் அமர்ந்து கொண்டனர்.

குழந்தைகள் சொக்கலேட், சுவிங்கம்.. என்று ரப்பர்களைப் பிரித்து வாய்க்குள் போட்டுக்கொண்டிருந்தனர்.

"அங்க பாருங்கோ..! கொஞ்சம் அல்சேசன்கள் வருகுது" சூரியா சுட்டிய திசையிலிருந்து தாய்லாந்து நாட்டு இளைஞர்கள் சிலர் தங்கள் மொழியில் கேலி பேசியபடி வந்து கொண்டிருந்தனர். இவர்களை அண்மித்ததும் அவர்களின் நடை தடைப்பட்டது.

மொழி புரியாவிட்டாலும் அவர்கள் கேலியை உணர்ந்ததில் ஆத்திரமடைந்தார்கள்.

"சனியன் பிடிப்பாங்கள்!"

அந்த இளைஞர்கள் எதையும் சட்டை செய்யாது சிரிப்புடன் நடந்தார்கள்.

"அல்சேசன்களுக்கு விசர் பிடிச்சிட்டுது போல. அது தான் நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு போகுதுகள்"

"அதுகளை விடு. உனக்கு லெற்றர் வந்ததே?" கேட்ட சூரியாவை ஜனு வெறித்துப் பார்த்தாள்.

"இல்லையடி. எல்லாம் மறந்திட்டுதுகள் போல. அல்லாட்டி நாங்கள் வேலைக்காரியள் தானே! எங்களுக்குப் பதில் போட்டாஎல் தங்கட கௌரவம் குறைஞ்சு போய்விடும் எண்டு எங்கட தொடர்புகளைத் துண்டிச்சிட்டினம் போல"

"நீங்கள் இஞ்ச இருந்து கொண்டு இப்பிடிச் சொல்லுங்கோ. ஊரில இருக்கிறதுகளுக்கு இருக்கிற கஷ்ரத்தைப் பாராதையுங்கோ. ஒரு லெற்றர் அனுப்ப பதின்மூண்டுக்கு மேல முடியுது" சூரியா சொன்னதில் நியாயம் இருந்தது. எப்போதும் அவள் சொல்லுவதற்கு மறுப்பு தெரிவிக்கும் காரணங்கள் மற்றவர்களிடம் இருப்பதில்லை. அவளுக்கிருக்கும் ஆற்றலுக்கு இந்தச் சூழல் மட்டும் முரணாக இல்லையென்றால்....

"டோன்ற் றன் ஒன் தரோட்"

"அதுகளை ஏன் பேசுறாய்" இதில இருந்தால் ரோட்டுக்குத்தான் ஒடுங்கள். என்னவேன் அதுகளுக்கு நடந்தால் துலைஞ்சம். வாங்கோ பாக்கிக்குப் போவம். கெதியில வீட்ட திரும்பிப் –

www.tamilarangam.net

போகவேணும். எங்கயோ பார்ட்டிக்குப் போகவேணும் என்டு அதுகள் சொன்னது"

எல்லோரும் புறப்பட ஆயத்தமாக, குழந்தைகள் கிழித்து வீசிய கடுதாசித் துண்டுகளை மெனிக்கா குனிந்து பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

"பொலிஸ்காரன் பிடிச்சால் இவையே பைன் கட்டப்போகினம்? அதுக்கும் எங்கடை சம்பளத்திலதான் வெட்டுங்கள். திருப்பிக் கேட்டால் நீ ஏன் வீச விட்டனி என்பாளவை. எல்லாம் திமிர் பிடிச்சதுகள் "

மெனிக்காவும், சந்தியாவும் பிறப்பால் சிங்கள மொழி பேசுபவர்கள். ஒரே நாட்டிலிருந்து வந்து ஒரே வேலை செய்கிறோம் என்ற உணர்வுதான் எல்லோர் மனதிலும் இருந்ததே தவிர, எந்தவித காழ்ப்புணர்ச்சிகளுக்கும் இடமிருக்கவில்லை.

"ஏன் ஜெ ஒரு மாதிரி இருக்கிறாய்?" மெனிக்காவின் குரலில் அன்பும், பரிவும் இழையோடியது.

"ஒண்டுமில்லை. எங்கடை சீமாட்டியளை நினைக்க ஆத்திரமாய் இருக்கு. நாங்களும் மனிசர்தானே? ஏன் இப்பிடி ஒவ்வொருநாளும் வார்த்தைகளால கொல்லுறாளவை. ஒரு காரணமும் இல்லாமல் ஏசுறாள். சில வீடுகளிலை நாலு வருசம், ஆறு வருசமாய் சனம் நிண்டு வேலை செய்யுது. இவளின்ரை வீட்டிலை மட்டும் இரண்டு கிழமை, நாலு மாசம் எண்டு அதுக்கு மேல நிக்கேலாம எல்லாம் ஓடுதுகள். காலையில ஆறுமணியில இருந்து இரவு பத்து பதினொன்று மட்டும் மிசின் மாதிரி வேலை செய்யிறம். ஒரு அஞ்சு நிமிசம் றெஸ்ற் பண்ண விடுங்களே?"

"இப்பிடி ஒரு அரை மணி நேரமோ முக்கால் மணி நேரமோ மனிசரோட பேசுறதுக்கு சுதந்திரம் கிடைச்சிருக்கே. இதுவும் இல்லாட்டிப் பைத்தியம்தான் பிடிக்கும்"

"எங்க சுதந்திரம் கிடைச்சிருக்கு? பிள்ளைய ளையும் சேர்த்துதானே விட்டிருக்கு. எங்களுக்கெண்டு என்ன சுதந்திரம் இருக்கு? பசிச்சா சாப்பிடேலாது. ஒரு வருத்தம் வந்தா றெஸ்ற் எடுக்கேலாது" ஜெ முடிக்க, சூரியா தொடர்ந்தாள்.


"தாங்கள் சிரிக்கிறளவை கதைக்கிறளவை. எங்களை மட்டும் ஒருத்தரோடயும் கதைக்க விடுறளவையில்லை. ஒரு நாளைக் கெண்டாலும் லீவு தாறளவையே அதுவும் இல்லை. மாதத்தில ரண்டு நாள் கட்டாய லீவு எண்டு கவன்மென்ற் அறிவிச்சாலும் இவளவையின்ரை வீட்டில அது இன்னும் அமுலுக்கு வர..வேயில்லை"

"நூற்றைம்..பது வெள்ளி முதல் சம்பளம். பிறகு கூட்டித் தருவினம் எண்டான் ஏஜென்சிக்காறன். இஞ்ச வந்தால் ஒண்டுமில்லை. எல்லாச் செலவும் அவையோடதான் எண்டான். ஆனா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

ருத்பேஸ்ற்றில இருந்து கோட் டஜ் வரைக்கும் நாங்கள்தான் வாங்கவேணும்" சூரியாவின் கு ரலில் விரக்தி வெளிப்பட்டது.

"என்னடி எமிலியோட பு துசா ஒரு பிள்ளை வந்திருக்கு. அங்க நிண்ட சிங்களப் பிள்ளை போட்டுதே?"

"உனக்குத் தெரியாதே? அந்தப் பிள்ளைக்கு மேயிலதான் கொன்ருக்ற் முடியுது?"

"இவளவை அந்தப் பிள் ளையின்ரை பெட்டிக்குள்ள ஒரு செயினைப் போட்டிட்டு திருட்டு பட்டம் சுமத்தி, அதின்ரை கா சில ரிக்கற் எடுத்து அனுப்பிப் போட்டினமவை"

"அது சரி. எங்கடை றூமு களுக்குப் பூட்டும் இல்லை. திற ப்பையும் தராளவையாம். அவ ளவை நினைச்சா என்னவும் செ ய்யலாம். இப்பிடித்தானே அநே கமா கனவீட்டுக்காறர் கொன் ருக்ற் முடியிற நேரத்தில தங்க ளுக்குச் செலவு இல்லாமல் இப் பிடி ஏதேன் பொய்யளை சொ ல்லி இந்த வேலையள் செய்து நாங்கள் கஸ்ரப்பட்டு உழைச்ச காசிலயே எங்களுக்கு ரிக்கற் எடுத்து அனுப்பிக் கொண்டிருக்கி றுளவை. இதை எங்க போய் - சொல்லுறது?"

"அக்கா ஐ வோன்ற் சம் வோட்டர்" குழந்தையொ ன்று கேட்க, சந்தியா பேச்சை முறித்து, அவர்களிடம் விடைபெற் றுக்கொண்டு போனுள். ஏனை யோர் தங்கள் மனச் சுமைக- ளைத் தொடர்ந்து ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டிருந் தார்கள்.

"இங்க, அந்த அசோகா வோட திரியும் ஒரு கட்டைப் பிள்ளை... அது நஞ்சு சாப்பி ட்டுச் செத்துப் போச்சு"

"ஐயோ...எப்பவடி?"

"நீ பேப்பர் பாக்கேல யே?"

"பேப்பர் பாக்க விடு வாளவையே. நீ விசயத்தைச் - சொல்லன்"

"அந்தப் பிள்ளை ஒரு இந்தியன்ரை வீட்டை வேலை செய்தது. அந்த வீட்டுக்காற ம னிசியின்ரை தம்பி அவளை றேப் பண்ணிப் போட்டான். பெட்டை சாகுமட்டும் றேப் பண்ணியிருக்கி றுன். இது அசோகா சொன்னது பேப்பரில போட்டிருக்கு மெயி ட் தற்கொலை எண்டு."

"அவங்கள் காசைக்காட் டித் தப்பிப் போடுவாங்கள். பாவம் அந்தப் பிள்ளை. அது உழைச்சுத்தான் வீட்டைப் பாக் கிறது. இனி அதின்ரை குடும்பத்து க்கு இந்த ராஸ்கல்களே காசு குடுக்கப் போகுதுகள்"

"ஊருக்குப் போனல் முத ல் ஏஜென்சிக்காறனுக்குதான் மு றையாய் குடுக்க வேணும். சும் மா பொய் சொல்லி காசை வாங்கிக்கொண்டு இங்க அனுப் புறது. நாங்களும் சிங்கப்பூருக்கு போனல் நிறைய உழைக்கலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என கனவு கண்டுகொண்டு வாறது. இங்க வந்து பார்த்தால் அல்லோ தெரியுது பேர் தான் சிங்கப்பூர் இதைவிட ஊர் எவ்வளவோ திறமெண்டு"

"அங்க சிறிலங்கா கவன்மென்றின்ரை படையள், எங்கட மூவ்மென்ற்ஸ்.. எண்டு எல்லோருமாய் ஆயுதத்தைக் காட்டிக் கொலை, கொள்ளையெண்டு – கொடுமைப்படுத்தியினம். இங்க இவளவை என்னெண்டா சித்திரவதை செய்யிறாளவை"

"எங்க பார்த்தாலும் கொடுமைக்காரர்தான் தென்படுகினம். மனிதத்தன்மையே இல்லாத ஜென்மங்கள். இதுகளோட எப்பிடியடி உயிர் வாழுறது? ஒண்டில் தற்கொலை செய்ய வே–ணும். இல்லாட்டி இவளவையைக் கொலை செய்ய வேணும்போல வெறியாக் கிடக்கு"

"இவளவையின்ரை ஏச்சுக்குப் பயந்து ஏன் தற் கொலை செய்ய வேணும். இதை இப்பிடியே விடக்கூடாது. இப்பிடியே விட்டால் எங்களைக் கொடுமை படுத்திற மாதிரித்தான் இனி வாற பிள்ளைகளையும் கொடுமைப் படுத்துங்கள். எங்களுக்கு நேர்ந்தது மற்றப் பிள்ளைகளுக்காவது நேராமல் இருக்க வேணும்" சூரியா நிறைய சூடாகியிருந்தாள்.

(மிகுதி அடுத்த கலத்தில்)




இலங்கைப் பாராளுமன்றத்திலிருந்து ஈரோஸ் எம்.பி.க்கள் 13 பேரும் 23.7.90 அன்று தமது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு வெளியேறியுள்ளனர். தமது பதவி விலகல் தொடர்பாக ஈரோஸ் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"இன்று ஜனநாயகக் குரலாகச் செயற்பட முடியாத சூழ்நிலை உள்ளது. நியாயங்கள் அர்த்தமற்றதாகும் ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனை எம்மால் கையாலாகாதவர்களாக கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாம் பாராளுமன்றம் வந்தபோது மக்கள்மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது, மக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களின் அபிலாசைகளை நிறைவே ற்றலாம் என்று அரசு எமக்கு உறுதிமொழி அளித்தது. அதில் நாம் நம்பிக்கை வைத்திருந் - தோம். ஆனல் இன்று நடப்பது என்ன? தமிழ் மக்கள்மீது இரா ணுவ நடவடிக்கை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப் படவில்லை. எனவே இப்படியான நிலையில் நாம் பாராளுமன்றத் திலிருந்து வெளியேறுவதைத்தவிர வேறு வழியில்லை"

இந்த அறிக்கையை வீர கேசரி முதல் பக்கத்தில் படி த்தபோது எனக்கு இந்த ஆண் டின் தலைசிறந்த நகைச்சுவைத் துணுக்கு இதுவாகத்தான் இருக் கமுடியும் என்று தோன்றியது . என்னையும் அறியாமல் சிரித்து விட்டேன்.

என்ன சிரிக்கிருய் என்று கேட்டபடி பத்திரிகையை எட் டிப் பார்த்தான் எனது நண்பன்

"ஒன்றுமில்லை. ஈரோஸ் றிசைன் பண்ணியிட்டுதாம்" என்று சொன்னேன் நான்.

"அதிலே சிரிக்க என்ன இருக்கிறது. அவர்கள் றிசைன் பண்ணத்தானே வேண்டும்" என் ருர் நண்பர்.

"என்?"

நாங்கள் இருவரும் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்துகொ ண்டிருந்தோம். சமீபகாலமாக அதுவும் குறிப்பாக யுத்தம்தொ டங்கியபின் கொழும்பில் பஸ்ஸு க்குள் தமிழில் பேசுவதைப் பெ ரும்பாலும் நிறுத்திவிட்டார்கள் என்றே சொல்லலாம.

தமிழ்ப் பெண்மணிகள் - பொட்டு இல்லாமல் பிரயாணம் செய்வதும், யாராவது தமிழில் தப்பித் தவறிப் பேசுவதைக் க ண்டால் புரியாததுபோல் வேறு புறம் திரும்பி நிற்பதும் மிகவும் சாதாரணமாகிவிட்டது.

மூலைக்கு மூலை 'தாய் நாட்டைக் காக்க தர்ம யுத்த த்தில் ஈடுபட்டிருக்கும் வீர சிங் கள போர் வீரனுக்கு' வாழ்த் துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட் டிருக்கும் இந்தச் சூழலில் பஸ் ஸினுள் தமிழ்ப் பத்திரிகையை வி ரித்தபடி ஈரோஸ் இயக்கத்தை பற்றிப் பேசினல் எப்படியிருக்கு ம்?

பஸ்ஸினுள் இருந்த ஓரிரு பிரயாணிகள் எம்மை உற்றுநோ க்குவதை நான் சாதுவாகக் க வனித்தேன்.

புலிகள் குண்டுவைக்கக் - கொழும்புக்கு வந்துவிட்டார்கள் என்று அவர்கள் சிலவேளை சந் தேகப்பட்டிருக்கக்கூடும் - சிங் களவர்களாக இருந்தால்.

தமிழர்களாக இருந்தால் 'இவங்கள் ஏன் இப்பிடிக் கதை க்கிருங்கள்? இவங்களால நாங் களும் மாட்டுப்படவேண்டி வரும் என்று அஞ்சியிருக்கக் கூடும்.

90 யூலையும் 83 யூலை ஆகிவிடுமோ என்ற அச்சம் எல் லாத் தமிழர்களிடையேயும் ஓர

www.tamilarangam.net

ளவாவது இருக்கத்தான் செய் கிறது.

ஆயினும் நாங்கள் இதைச் சட்டை செய்யவில்லை. காரணம் கலவரம் குறித்த எமது அச்சமின்மை அல்ல. நாளுக்கு நாள் நடந்துகொண்டிருக்கும் மாற்றங்கள் எங்களைப் பேசாமலிருக்க விட்டுவைக்கவில்லை.

நான் கேட்ட கேள்விக்கு நண்பர் பதில் சொல்லவில்லை. வெளியே எட்டிப் பார்த்தார்.

சத்தமிட்டவாறு ஒன்றின் பின் ஒன்றாக மூன்று அம்புலன்ஸ் வண்டிகள் வந்து கொண்டிருந்தன முன்னும் பின்னும் பொலிஸ் காவல்வண்டிகள் வேறு.

"ஒரு பெரிசு விழுந்திட்டுது போல" என்றார் நண்பர்.

"உது இப்ப ஒவ்வொரு-நாளும்தானே வருகுது. அரசாங்கம் சிங்களச் சனத்தைப் பேய் காட்ட ஏதோ ஒருதரும் சாகேலை எண்டு நடிக்குது. ஆனால் ஒவ்வொருநாளும் பத்துப் பதினைஞ்சுக்கு குறையாமல் வருகுது

"அவங்கள் பெரிய கேசுகளைத்தான் கொண்டு வாறுங்கள். மற்றதுகளை அங்கினையே - போட்டு எரிச்சுப் போடுவாங்கள்" என்றார் நண்பர்.

பஸ்ஸிற்குள் இருந்த சனங்களும் இதைப் பற்றிப் பேசத் தொடங்கியிருந்தார்கள்.

'எல்லாம் புலியளைச் சுட்டால்தான் நிம்மதி' என்ற அபிப்பிராயம்தான். தேசிய பாது-காப்பு நிதிக்கு தங்களது கொம்பனியிலிருந்து 15,000 ருபா கொடுத்ததாக ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஏன் ஈரோஸ் றிசைன் பண்ணத்தானே வேணும் எண்டு சொல்லுறாய்?" என்று விடாமல் கேட்டேன் நான் நண்பனிடம்.

"ஏன்? தாங்கள் நினைச்ச போது புலியள் இங்கலைப் - போகச் சொன்னாங்கள். இவங்கள் வந்தாங்கள். இப்ப யுத்தம் துவங்கியிட்டுது. விலகச் சொல்லியிருப்பாங்கள். விலகத்தானே - வேணும்? சிரிக்கிற விசயமாயிது விலகாவிட்டால் டெலோவுக்கும் ஈபிக்கும் நடந்ததுதானே நடக்கும்...?"

"இவங்கள் விலகுறதாலை புலியளுக்கு என்ன லாபம்?"

"இது லாப நட்டக் கணக்குப் பாக்கிற விசயமில்லை. சண்டை தொடங்கிவிட்டபடியால் என்ன செய்யவேணும் எண்டு இவையளுக்குச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. பாலகுமாரும் யாழ்ப்பாணத்திலை யுத்தத்துக்க மாட்டுப்பட்டிட்டார்.. இருந்து என்ன செய்யிறதெண்டு தெரியாது. மாறி மாறிப் புதுப் பிரச்சினையள் வருகுது. எத்தினை - நாளைக்கு வாக்களிப்பிலை கலந்து கொள்ளாமல் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துக் காலத்தைக் கடத்த முடியும்?

விலகாமல் இருந்து ஏதாவது சொல்லிவிட்டுப் பிறகு அத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கிறதை விட விலகிவிட்டால் ஒரு பிரச்சினையும் இல்லையே.. விலகினால் என்ன, ஈரோஸ் திரும்பவும் அவர்களையே நியமித்துவிட்டால் போச்சு? பதவி காலியானதே-யொழிய பாராளுமன்ற அங்கத்துவ வாய்ப்பு இன்னும் பறிபோகவில்லையே.." என்று சொன்னார் நண்பர்.

"நான் சிரிச்சதும் அதுக்குத்தான். அவங்கடை அறிக்கைகளிலை அரசாங்கத்தின்ரை உறுதிமொழியைத் தாம் நம்பினதாக சொல்லியிருக்கிறுங்கள். அதுதான் எனக்குச் சிரிப்பு வந்தது. எப்பிடியோ ஒரு மாதிரி ஈரோஸின் நழுவல் அரசியலுக்கு ஒரு முடிவு வந்திட்டுது.."

"அது முடிவில்லை. அது ஒருநாளும் முடியப் போறதுமில்லை. ஆறுவது திருத்தச் சட்டத்-தை ஏற்க மாட்டோம், பாராளுமன்றம் போகமாட்டோம் என்று முதலில் சொன்னுர்கள். பிறகு அதைப் பற்றி எந்தக் கதையும் இல்லாமல் பாராளுமன்றம் போனுர்கள். புலியள் அவசரப்பட்டு றிசைன் பண்ணவேண்டாம் என்று சொன்னதாக யாழ்ப்பாண பேப்பர்களிலை செய்தி வந்தது உனக்கு ஞாபகமிருக்கோ தெரியாது. பாராளுமன்றம் போய் அந்தக் கதையையே எடுக்காமல் கொஞ்சக் காலம் காலந்தள்ளினுர்கள்.

அரசுக்கும் புலிக்கும்இடையில் முரண்பாடு வெடிக்கும்போலத் தெரிஞ்சவுடன ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்கக்கோரி தனிநபர் மனு கொண்டு வருவதாகச் சொன்னுர்கள். பாராளுமன்றத்தினை மேடையாகப் பயன்படுத்துவோம் எனச் சொன்ன போதும் அவசரகாலச் சட்ட நீடிப்புப் போன்ற விவாதங்களில்கூட பங்களிக்காமல் ஒதுங்கினுர்கள். மாகாணசபைக் கலைப்பு விவாதம் நடந்தது. அது தொடங்குவதற்கு முதல்நாள் தாம் பாராளுமன்றத்தைப் பகிஸ்கரிக்கப் போவதாக அறிவித்தார்கள்.."

"ஓமோம்.. அதேன் அப்பிடிச் செய்தவங்கள்?"

"அப்பிடிச் செய்ததுக்கு அவை சொன்ன காரணம் உனக்குத் தெரியுந்தானே. பேப்பரில பாத்திருப்பாய். ஆனல் உண்மைக் காரணம் அடுத்த கிழமை மாகாணசபைக் கலைப்பு விவாதம் தொடங்க இருந்ததுதான். மாகாணசபைளைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனதிபதிக்கு வழங்கப்பட்டால் மாகாணசபைக்கு இருக்கிற கொஞ்சநஞ்ச அதிகாரத்தையும் பறிக்க உதவினதாகும். கலைப்பை எதிர்த்தால், கலைப்பை விரும்புகிற புலியை எதிர்த்ததாகும். இதிலிருந்து தப்ப சுகமான வழி பாராளுமன்றத்-தைப் பகிஸ்கரிப்பதுதான். இதன் மூலம் இரண்டு விசயத்திலிருந்தும் தப்பிவிடலாம்"

"கலைத்துவிட்ட பின்னும் கூட அதுபற்றி ஒரு வார்த்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட அவர்கள் பேசவில்லையே. ஆனால் அதைக் கலைக்காமல் பண்ணுவதற்கு வசதியாக ஈபி தானாகவே அதைக் கலைத்துவிட வேண்டுமென்று ஐடியா சொன்னார்கள். ஈபி அதைச் செய்யவில்லை. இவர்கள் மௌனமாக இருந்துவிட்டார்கள்"

"இப்போது பாராளுமன்றத்திலிருந்து வெளியேறிவிட்டார்கள். திரும்பவும் இவர்களை புது எம்பிக்களைத் தா என்று அரசு கேட்கப் போகிறது. அப்போது நிலைமையைப் பார்த்து முடிவு செய்வார்கள். அவர்களது அரசியல் இப்படியேதான் இருக்கும். அது முடியப் போவதில்லை. அதை முடிக்கிறது புலிகளின் கையில்தான் இருக்கிறது. என்றைக்கு எங்களுடன் சேருங்கள் அல்லது இயக்கத்தைக் கலையுங்கள் என்று புலிகள் கேட்கிறார்களோ அன்றைக்குத்தான் அது நடக்கும். ஏற்கெனவே பாலகுமார் அவர்களுடன் சேர்வதா இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார். ஒருவேளை யுத்தத்தில் புலி தோற்றால்... என்றொரு சந்தேகம் எழுவதால் எந்த முடிவையும் எடுப்பதற்குமுன் யுத்தம் முடியும் வரை பொறுத்திருப்பது நல்லது தானே. யுத்தம் யாருக்குச் சாதகமாக வந்தாலும் ஈரோஸ் அதைத் தனக்குச் சாதகமாக்கி கொள்ளத்தான் இப்போது விலகியிருக்கிறது.."

"ஆனால் புலிகள் சமஷ்டி தீர்வொன்றுக்கு தயார் என அறிவித்திருப்பதாகப் பேசப்படுகிறதே?"

"பேசப்படுகிறது. அதில் ஓரளவு உண்மையும் இருப்பதாக அறிகிறேன். 50 ஆண்டுகளுக்கு முந்திய தமிழரசுக் கட்சியின்கோரிக்கை அது. அப்படி அதற்கு அரசு உடன்படுமென்றாலும் ஈரோஸுக்கு லாபம்தான்"

"எப்படி?"

"எப்படியா? முதலில் பாராளுமன்றத்தைப் பகிஸ்கரித்தது பிறகு வெளியேறியது என்பதன் மூலம் தமது யுத்தத்தின் மீதான எதிர்ப்பைக் காட்டியிருப்பதை நிரூபிக்கலாம். வரப் போகிற சமஷ்டி - அப்படி வந்தால்- அது யுத்தத்தின் வெற்றியால் வந்தது. எனவே யுத்தத்தில் புலிகளை எதிர்த்த மற்றக் கட்சிகளுக்கு அல்லது 'துரோகிகளுக்கு' அந்த சமஷ்டியில் உரிமை கொண்டாட யோக்கியதை கிடையாது. ஈரோஸுக்கு அது கிடைக்கும். எப்படியும் அதற்கு லாபம்தான்..."

"உண்மையில் உனது அபிப்பிராயம் என்ன? யுத்தத்தை ஈரோஸ் உண்மையாகவே எதிர்க்கிறதா?"

"ஈரோஸ் எதை உண்மையாகச் செய்தது? வாயாலும், வார்த்தைகளாலும்தான் எதிர்க்கும். அது எடுபட்டால் சற்று உரத்துக் கூச்சல் போடும். அப்படியில்லாது போனால் மௌனம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதித்துவிடும். இந்த யுத்தத்தில் அரசபடைகளின் அட்டூழியங்களை மற்றத் தமிழ் எம்பிக்கள் அம்பலப்படுத்திய அளவுகூட ஈரோஸ் அம்பலப்படுத்தவில்லை. உண்மையில் ஈரோஸ் யுத்தத்தை எதிர்க்கவில்லை. உள்ளூரப் புலிகள் பலவீனமடைந்து அல்லது தோற்றுப் போவதே அதன் விருப்பம் என்றுகூடக் கொள்ளலாம். மற்ற இயக்கங்கள் அதை வெளிப்படையாகச் சொல்லுது. இது அப்படி சொல்லவில்லை. அதுதான் வித்தியாசம்.. சொல்லத் திராணி கிடையாது. உண்மையாகவே இது தமிழ்மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கிறதா என்பதே எனக்குச் சந்தேகம்தான்.."

"எனப்படிச் சொல்லுகிறுய்?"

"யுத்தத்தை தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமல்ல என அரசு சொல்கிறது. புலிகளுக்கு எதிரான யுத்தமே என்று திரும்பத் திரும்பச் சொல்கிறது. அது உண்மையல்ல என்று சொல்கிற ஈரோஸ் புலிகளின் யுத்தத்தை எப்படி அணுகவேண்டும்? புலிகளின் எதிர்ப்பு யுத்தம் தமிழ் மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்தது இல்லையா?

தமிழ் மக்களின் விடுதலைக்கும் இந்த யுத்தத்திற்கும் சம்பந்தமிருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனல் அவர்களின் நலன்களுக்கு இது அவசியமானது. இந்த யுத்தமில்லாமல் தமிழ்மக்கள் தமது நிலையில் ஒரு அங்குலம்கூட முன்னேற முடியாது என்பதை அரசு காட்டியுள்ளது. ஆக, அவர்கள் வாழ்வில், நலனில் இந்த ஈரோஸுக்கு அக்கறை இருக்கும் என்றுல் சும்மா 'கையாலாகாமல்' இருக்க முடியாது என்று பசப்பியிருக்கத் தேவையில்லை. இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்லவென்றுல் முதலில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்கு, அதன்பின்தான் உனக்குப்புலிகளுடன் சண்டை பிடிக்க உரிமை உண்டு, அதுவரை புலிகளுக்கு எதிரான யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதே என்று அடித்துச் சொல்லியிருக்கலாம். அதை அம்பலப்படுத்த கொழும்பிலேயே இயக்கம் நடத்தியிருக்கலாம்"

"இயக்கமா..?"

"ஏன் நடத்த முடியாது. 13 எம்பிக்களும் பசைவாளியை காவியபடி 'போஸ்டர் கம்பயின்' செய்திருக்கமுடியாதா? எம்பிக்களை கைது செய்யாமலே 'மண்டையிலே போடும்' அதிகாரம் ஆமிக்கு இன்னும் வழங்கப்படவில்லையே? பொதுக்கூட்டம் நடத்தியிருக்கலாமே? ஊர்வலம்.. குறைந்தபட்சம் ஒரு துண்டுப்பிரசுரம்? ஒரு மண்ணுங்கட்டியும் செய்யேலாது. செய்ய மாட்டினம். ஆனல் கையாலாகத்தனம் பற்றி பேசுகிருர்கள்.

இவையெல்லாம் எதையாவது சாதித்துவிடும் எனநான் நினைக்கவில்லை. ஆனல் மக்களிடையே பதில் கருத்தைப் போகவைத்திருக்கலாமே? உண்மையில்

www.tamilarangam.net

இவர்களுக்கு புலிகளில் மட்டுமல்ல மக்களிடமும் அக்கறை கிடையாது.."

"இப்ப ரிசைன் பண்ணியிட்டு என்ன செய்யப் போகினம்?"

"ரிசைன் பண்ணமுதல் என்னசெய்தவை? சும்மா இருந்தவை அப்பிடியே இருப்பினம். வேறை என்ன?"

ஈரோஸ் பேச்சில் பஸ் ஹோல்ட்டைத் தவறவிட்டு இரண்டு ஹோல்ட் தள்ளி இறங்கி திரும்பி நடந்துவந்தோம்.

"ஏதாவது மதுபானக் கடையில் பியர் அருந்தியபடி 'எப்படியும் எங்கடை இந்த மூவ்வா லை மக்கள் மத்தியிலை எங்களையும் துரோகிகள் என்று சொல்லமுடியாத நிலை உருவாகியிருக்குது. யுத்தம் முடியும்போது நிலைமையை அவதானித்து இறங்கலாம் களத்தில்' என்று பேசுவார்கள்.." நண்பர் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்தார்.

"பியர் அருந்துவது பற்றி நீ சொல்லுவது சரியில்லை. அது முக்கிய விசயமில்லைத்தானே?" என்றேன் நான்.

"ஒண்டுமே முக்கியமில்லை விடு. பியரும் சரி. தமிழீழமும் சரி. மக்களும் சரி. யுத்தமும் — சரி.." என்று சிரித்தார் நண்பர்.

மூன்று நாட்களுக்குப் பிறகு பத்திரிகையில் றஞ்சன் சொன்னதாக இப்படி ஒரு செய்தி வந்திருந்தது:


... ஈரோஸினர் புலிகளுக்குப் பயந்துதான் ரிசைன் பண்ணினர்கள்...

பிறகு ஈபி, ஈ.என்.டி.எல்.எவ், புளொட் எல்லாமே இப்படி அறிவித்தன.

மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரன் மட்டும் 'சனநாயக வழிக்குத் திரும்பியவர்களைத் திருப்பியனுப்பிவிட்டது அரசு' எனக் கவலைப்பட்டிருந்தார்

ஈரோஸின் 'சனநாயககுரல்', அரசின் 'சனநாயக வழி' என்பன பற்றி எனக்கு இன்னமும் தெளிவில்லை.

யாரிடமாவது விசாரித்து பார்க்கவேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்ன செய்ய..?

மனிதன்
நான் !
மரணிப்பதற்கு
பாழும் மனம்
மறுக்கிறது !!

உழைப்பைத் தேடி
வேலை செய்யலாம்...
உடல் அசதியோ
மிகுதி !

வட பகுதியின்
சந்தடித் தெருக்களில்
பிச்சைக்காக
கரங்களை நீட்டலாம்.
வெட்கம் என்னை
விடமாட்டேன்
என்கிறது.

மாநரத்துக்
கடைப்புறப் பாகம்
களவு செய்யலாம்.
பாவம் என்று மதம்
என்னைக்
கட்டிப் போட்டது.

எல்லாவற்றையும்,
எல்லாவற்றையும்
மறந்து என்
காதலி கரங்களை
இறுகப் பிடிக்கலாம்.
சாதிப் பிளவு
சங்கடமாயிற்று.

இதற்கும் மேலே
எதற்குமாயிருக்கலாம்.

குழு ஒன்றமைத்துக்
கூட்டம் போடலாம்.
துப்பாக்கி தாங்கலாம்.
சுடலாம், வெட்டலாம்.
சுட்ட பிணத்தின்
காதினை அறுத்து
அடகு வைக்கலாம்.
மோதிரம் கழட்டலாம்.
..........

ஏனெனில் இன்னமும்
மனிதன் நான் !
மரணிப்பதற்குப்
பாழும் மனம்
மறுக்கிறது.

சித்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஓகஸ்ட் 1990 கலம்:32

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி ............ THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மெனி: 6 மாதங்கள் - 20,- டி.எம்
1 வருடம் - 38,- டி.எம்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய வங்கி கணக்கு இல. 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் - 25,- டி.எம்
1 வருடம் - 48,- டி.எம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் - 45,- யு.எஸ்.டொலர்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய தபாற் கணக்கு இல.30807468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தைக் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கு மாகாணத்தில்

**கட:** கிழக்கு மாகாணத்தில் அரசினால் திட்டமிடப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுவரும் சிங்களக் குடியேற்றங்களினால் ஏற்படும் பாதிப்புகள் என்ன?

**புவி:** தமிழ், முஸ்லீம் மக்களின் பயிர்ச் செய்கை நிலங்கள் கொஞ்சங்கொஞ்சமாக அபகரிக்கப்பட்டு அங்கு சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். இதனால் தமிழ், முஸ்லீம் மக்களின் பிரதேசங்கள் பறிபோகின்றன என்பதுடன் விவசாயத்தையே முழுமையாக நம்பியிருக்கும் கிழக்கு மாகாணத்திலுள்ள சிறுபான்மையினரின் பொருளாதாரம் திட்டமிட்டப்பட்டு நிர்மூலமாக்கப்படுகிறது என்பது கவனத்திலெடுக்கப்படவேண்டியதாகும்.

**கட:** சிறுபான்மையினருக்கெதிரான அரசின் இராணுவ நடவடிக்கைகளின்போது கூடுதலாக வடக்கில் இடம்பெறும் சம்பவங்களே உலகின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவரப்படுகின்றன. இதற்கு என்ன காரணம்?

**புவி:** உயிரிழப்புகளைப் பொறுத்தவரையில் வடக்கைவிட கிழக்கு மாகாணமே அன்றிலிருந்து இன்றுவரை அதிகளவு இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. எனினும் 'தமிழர் தாயகம்' என்பது வடக்கு மாகாணம் என்றே உலகிற்குக் காட்டப்பட்டுள்ளது. ஆரம்பத்திலிருந்தே அனைத்து இயக்கங்களும் வடக்கை மையப்படுத்தியே தங்கள் நடவடிக்கைகளையும், பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருகின்றமை, தமிழீழப் போராட்டத்திலும் வெளி உலகப் பிரச்சாரங்களிலும் குறிப்பிட்ட சக்திகளாகக் கருதப்படும் வெளிநாட்டுத் தமிழர்களில் 99%. ஆனவர்கள் குடாநாட்டைச் சேர்ந்தவர்களே போன்றமை இதற்கான காரணங்களில் சிலவாகும்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் கல்விகற்றோர் வீதம் குறைவாகையால் மனித உரிமைச் சங்கங்களிலோ, செய்தித் தொடர்பு நிலையங்களிலோ, சர்வதேசத் தொடர்புகளிலோ ஈடுபடுபவர்கள் மிக மிகக் குறைவு என்பதுடன் பொருளாதார வசதிகள் இல்லாமையும், முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருப்பதும்கூட இதற்கான காரணங்களாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்